விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7144)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 17 வெள்ளிக்கிழமை (02.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

## 112 கிலோ கேரள கஞ்சா மாதகல் கடற்பகுதியில் மீட்பு

2 கோடி 24 இலட்சம் ரூபாய் என மதிப்பீடு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்குள் கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்படவிரு 23

## யாழ்.நாவற்குழி இராணுவ முகாமில்

இளைஞர்கள் காணாமல்போன வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாவற்குழி இராணுவ முகாம் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 3 இளை 23

## கொழும்பு ரயில் விபத்தில் யாழைச் சேர்ந்தவர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு, பம்பலப்பிட்டி பகுதியில் ரயில் மோதியதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையை சேர்ந்த தம்பையா மகேந்திரன் (வயது-65) என்ப 23

## பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு பூஜிதவை அழைக்க வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரியே தெரிவித்தார்

# தெரிவுக்குழுவில் உண்மையை போட்டுடைத்தார் பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

கடந்த ஒக்ரோபர் 2018 அன்று நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவை அழைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்கு அறிவித்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன பாராளுமன்ற தெரிவுக்குழுவில் உண்மையைப் போட்டுடைத்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு (பி.எஸ்.சி) முன்னிலையில் சாட்சியமளிக்கும்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"நான் வழக்கமாக ஜனாதிபதியை கேள்வி கேட்க மாட்டேன், ஆகவே, பூஜித ஏன் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்தார் என்று நான் அவரிடம் கேட்கவில்லை.

அந்த நேரத்தில், நாமால் குமாரவின் ஜனாதிபதி மீதான படுகொலை சதித்திட்டத்தில் பூஜிதவின் தொடர்பு குறித்து விசாரணை நடந்து கொண்டிருந்தது. பூஜிதவுக்கு தெரிவிக்கக் கூடாத வேறு சில விடயங்களும் இருந்தன. அவரை அழைக்காததற்கு காரணம் என்று நினைத்தேன். பூஜித ஜெயசுந்தரவிடம் என்.எஸ்.சி.க்கு அவசியமில்லை என்று செய்தியை அனுப்ப முடியாது என்று சிசிர மெண்டிஸ் எனக் 23

## கோதுமை மா - பால்மாவுக்கு

விரைவில் விலைசூத்திரம்

(கொழும்பு)

உலகச் சந்தையின் விலை மாற்றத்துக்கு ஏற்ப கோதுமை மா மற்றும் பால்மா ஆகிய வற்றுக்கான விலை சூத்திரம் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் புத்திக பத்திரன தெரிவித் 23

கோத்தபாய ராஜபக்ஷவின்

## அமெரிக்க குடியுரிமை ரத்தானதாக அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் அமெரிக்க குடியுரிமை ரத்து செய்யப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்க குடியுரிமை ரத்து செய்யப்பட்டமைக் 23

### அன்பு வாசகர்களே!

தேசிய லொத்தர்சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர்சபையின் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகளை உங்கள் வலம்புரியில் பார்க்க முடியும்.

## யாழில் 1,253 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 1,253 உள்வாரி பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை வீர சிங்கம் மண்டபத்தில் நடை 23

## அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

(கொழும்பு)

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். சதொச நிறுவனத்தில் பணிபுரியும் பாதுகாப்பு அதிகாரிகள் எனக் கூறி, நிறுவனத்தில் இருந்து அமைச்சர் பதியுதீன் மாதாந்தம் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளார். இதனை சிரமப் பட்டு நிரூபிக்க வேண்டியது எதுவுமில்லை.

ரிசாத்தின் பணத் 23

## மரண தண்டனையை எதிர்ப்பவர்கள் சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு எதிரானவர்கள்

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

போதை வர்த்தகர்களுக்கு மரண தண்டனையை வழங்குவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து, வீதிக்கு இறங்கியுள்ளவர்கள் சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு எதிராக செயற்படுவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



23

## மகிந்தவால் தீர்வு வழங்கப்படும் என நாமல் கூறுவது வேடிக்கை

மாவை எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தினால் தீர்வு வழங்கப்படும் என நாமல் ராஜபக்ஷ கூறுவது வேடிக்கையானது என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். 23

## பொறுப்புக்களை ஏற்கத் தயார்

அமைச்சர் சஜித் அறிவிப்பு

(கொழும்பு)

பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளத் தயார் என செயற்குழுவிற்கு அறிவித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர், அமைச்சர் சஜித் 23

– பாராளுமன்ற தெரிவுக்குழுவில் –

## பொன்சேகாவை கடுமையாக திட்டிய சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

பாராளுமன்ற விசேட தெரிவுக் குழு கூட்டத்தில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 23

பாராளுமன்ற தெரிவுக்குழுவில்

## சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸார் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்கியபோது பொலிஸார் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. 23

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் லோகேஸ்வரன் (சின்னத்தம்பி)



வேம்படி முருகமூர்த்தி கோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் லோகேஸ்வரன் (சின்னத்தம்பி) அவர்கள் நேற்று (01.08.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் - மாமணிதேவியின் அன்பு மகனும், இராசரத்தினம் - தனலட்சுமியின் பாசமிகு மருமகனும், யசிந்தாவின் அன்புக் கணவரும், யதுஷா, கஜீபன், சங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிருஜனின் மாமனாரும், யுகதீசன், வாசுகி, நந்தினி, ஜமுனா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்திகோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(9777)

தகவல் : குடும்பத்தினர்

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முடிவில்லை

## ஐ.தே.க அறிவிப்பு

(கொழும்பு)


ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற் குழு கூட்டம் நேற்று கூடியிருந்த போதிலும், ஜனாதிபதி வேட்பாளர் குறித்து தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அக் கட்சியின் செயற்குழு உறுப்பினரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலு வல்கள் இராஜாங்க அமைச்சருமான நிரோ ஷன் பெரேரா தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுக் காலை கூடிய ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு வினரின் கலந்துரையாடல் சுமார் 2 மணித் தியாலயங்கள் வரை இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் 5 ஆம் திகதி அமைக்கவுள்ள புதிய கூட்டணி தொடர் பிலும் ஜனநாயக தேசிய முன்னணிக்கான பொதுக் கொள்கைகள் தொடர்பிலும் விசேட மாக ஆராயப்பட்டுள்ளதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (ம-3)

# தமிழருக்கு தீர்வை வழங்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கே ஆதரவு

## சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கு வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி வேட்பாளருக்கே தாம் ஆதர வளிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித் துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அடுத்த தேர்தலில் போட்டியிடும் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு தெரி விப்பது என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை தீர் மானிக்க வில்லை.

அத்தோடு சர்வதேசம் வழங்கும் உத்தரவாதத்திற்கு அமைவாக யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக தீர்மானிப் போம், இந்த உத்தரவாதத்தை எந்த நாடு வழங்கும் என்பது கேள்விக்குறியான விடயம்.

குறிப்பாக இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை கூட சரியான முறையில் நடைமுறைப் படுத்தாத இவர்கள், தேர்த லின் பின்னர் வழங்கப்பட்ட உத்தர வாதத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது என கூறினார். (ம-3)


**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532


# முக்கிய அறிவித்தல்

**TKT** நல்லெண்ணெயின் அன்பான வாடிக்கையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் முக்கிய அறிவித்தல். எள்ளின் விலை ஏற்றம் காரணமாக 01.08.2019 அன்று தொடக்கம் நல்லெண்ணெய் விலை அதிகரிக்கப்படுகின்றது என்பதை அறியத்தரு கின்றோம்.

| | | |
|---|---|---|
| 750 Ml | = | 800 /= |
| 350 Ml | = | 400 /= |
| 200 Ml | = | 250 /= |

(9770)

தங்கள் ஆதரவிற்கு நன்றி.

தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
மூத்தநயினார் கோவிலடி, சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தொ.பே. : 021 225 5718 / 077 832 8828 / 077 652 8633

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பதிவாளர் நாயகம் பத்திரமுல்லையில்
**27.05.2019** அன்று நடைபெற்ற
நேர்முகத் தேர்வில் காரைநகர்,
வலந்தலையைப் பிறப்பிடமாகவும்
225/1, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்,
கிழக்கில் வசிக்கும்.



## நாராயணன் குகநேசன் (JP)

**(ஓய்வு நிலைத் தபாலதிபர்)**

அவர்கள் யாழ் மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில்
விவாகப் பதிவாளராக தெரிவு செய்யப்பட்டு அவருக்கான
நியமனக் கடிதத்தினை மாகாண சபைகள் உள்ளூராட்சி
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்
**கௌரவ மாண்புமிகு வஜிர அபேவர்தன**
அவர்களால் பதிவாளர்நாயகம் திணைக்களம்
பத்திரமுல்லையில் 08.07.2019 இல் வழங்கிக்
கொரவிக்கப்பட்டதை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-7167)

**- வாழ்த்துவோர் : நண்பர்கள்**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.07.2019 புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப தலைவி

## அமரர் வேலுப்பிள்ளை இலட்சுமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய
கிரியைகள் இன்று 02.08.2019
வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00
மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெறவிருப்பதால்
அத்தருணம் தாங்களும் வருகைதந்து
அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய
போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அழைக்கின்றோம்.

(9774)

38/4, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

021 222 7009

இங்ஙனம் :
குடும்பத்தினர்

## குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

**தமிழகத்திலிருந்து** வருகை தந்திருக்கும் **பேராசிரியர் உழவன் முத்துவேல்** அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

(C-7169)

காலம் : 03.08.2019 சனிக்கிழமை தொடக்கம் 09.08.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : **மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல்**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

அகத்தாய்வு 1ஆம் நிலை 03.08.2019 சனிக்கிழமை மற்றும் 04.08.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**


**தொ.இல : 021 222 2772**

# கல்முனை விவகாரத்தில் கதை எழுதிய கூட்டமைப்பு நடித்து வென்றார் ரணில்!

## பேராசிரியர் திஸ்ஸ சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்)**

**கல்முனைப் பிரதேச செயலகத்திற்கு தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என ரணில் அரசாங்கத்திற்கு கடிதம் மூலம் கதை எழுதிய கூட்டமைப்பிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது ஆதரவு வழுங்குங்கள் தீர்வு தருகின்றேன் எனக் கூறி நடித்து ஏமாற்றிவிட்டதாக முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**



கல்முனை விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுகிறது எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக வலம்புரிக்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தமிழ் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துமாறு பொது மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்திலும் உண்ணாவிரதத்தையும் முன்னெடுத்திருந்தனர்.

இப் போராட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஒருநாள் கூட பங்கேற்காத சூழ்நிலையில்அம்மக்களின் போராட்டம் உறுதியாக இடம்பெற்றது.

இந்நிலையில் கடந்த மாதம் ரணில் அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் அரசாங்கத்திடமிருந்து கல்முனை விவகாரத்திற்கு தீர்வைப்பெற்றுத்தருகிறோம் எனக் கூறி அம் மக்களை ஏமாற்றிவிட்டனர். பாராளுமன்றத்தில் ரணில் அர சாங்கத்துக்கு எதிராக வரவு-செலவுத் திட்டத்தின் போது நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி ரணில் அரசாங்கத்தை தூக்கி நிறுத்திய பெருமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சாரும்.

ரணில் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் வரும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு முன்பே தெரிந்த நிலையிலும் கூட கல்முனை விவகாரத்திற்கு ரணில் அரசாங்கத்துடன் பேசித் தீர்வொன்றைப் பெற்றுவிட்டு ஆதரவு தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் ரணில் அரசாங்கம் கூறுகின்ற வார்த்தைகளை கேட்டு தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுகிறர்கள்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதுவதும் அதை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறமையாக நடித்து வெற்றி பெறுவதும் தொடர்கதையாகி விட்டது எனவும் பேராசிரியர் திஸ்ஸ மேலும் தெரிவித்தார். (இ-10)

# மரண தண்டனையை இல்லாதொழிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

## மைத்திரிக்கு எதிராக ஐ.தே.க.காய்நகர்த்தல்

(கொழும்பு)

மரண தண்டனையை அமுல்படுத்துவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் மரண தண்டனையை இல்லாதொழிக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தனிநபர் பிரேரணை மூலம் குறித்த சட்டமூலத்தை காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட நேற்று வியாழக்கிழமை முன்மொழிந்தார்.



எந்தவொரு சட்டத்தின் மூலமும் மரண தண்டனையை விதிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருப்பதனை இல்லாதொழிக்க வேண்டும் என்பது இந்தச் சட்ட மூலத்தில் வலியுறுத்தப்பட்டது.


குறித்த திருத்தம் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெற்றால், இது நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் எந்தவொரு நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய குற்றத்திற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நபராக அவர் கருதப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# சிறுபான்மை மக்களுக்கு எதிராகவே அவசரகாலச் சட்டம் செயற்படுகிறது

## டக்ளஸ் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற அவசரகாலச் சட்டமானது. எமது சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டதைப் போலவே அதன் தற்போதைய செயற்பாடுகளில் இருந்து தெரிய வருகின்றது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அவசரகாலச் சட்டம் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர். உதவிகள்,- ஒத்தாசைகள். ஒத்துழைப்புக்கள் வழுங்கியோர் என்ற பெயரில் பலர் கைது செய்யப்பட்டு. தடுப்புக்களில் வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இனிமேல். இத்தகையதொரு தாக்குதல் இடம்பெற வாய்ப்பில்லை என ஒரு தரப்பினர் கூறுகின்ற நிலையில். அப்படிக் கூறுவது முட்டாள்தனம் என்றும் தாக்குதல் ஆபத்து இன்னும் முடிவுறவில்லை என்றும் தனிநபர் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்றும் இன்னும் ஒரு தரப்பால் கூறப்பட்டும் வருகின்றது.

இத்தகைய முரண்பாட்டு ரீதியிலான கருத்துக்கள் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில். இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புப் தொடர்பில் உறுதியான விடயங்களை அறிவிப்பது யார்? என்பது தெரியாத ஒரு நிலையில் மக்கள் வாழ்கின்ற அதேவேளை. எமது மக்களது வாழ்க்கை தொடர்பிலான தடைகள் பலவும் இந்த அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கின்ற காலகட்டத்திற்குள் அவசர. அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா? என்ற சந்தேகம் எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டில் பரவலாக மத வழிபாட்டுத் தலங்கள் தொடர்பி லான வலியத் திணிக்கப்படுகின்ற பிரச்சினைகள் பலவும் இந்தக் காலகட்டத்திற்குள் மிகவும் அதிகரித்து விட்டுள்ளன.

கன்னியாவாகட்டும், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவிலாகட்டும். மலையகத்திலே மாடசாமி கோவிலாகட்டும். ஒட்டுசுட்டான் அலங்கார முருகன் கோவிலாகட்டும் இப்படி நிறையவே மத வழிபாட்டுத் தலங்கள் சார்ந்து பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

"தென்னை மரத்தில் தேள் கொட்ட. பனை மரத்தில் நெறி கட்டியதைப்போல்" உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றிருந்த பகுதிகளில் எல்லாம் மக்கள் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்க. வவுனியா பேருந்து தரிப்பு நிலையத்தில் கடந்த 3 மாத காலமாகப் பயணிகள் அனைவரும் பலத்த சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

பேருந்தின் கதவுகளைப் பூட்டி பயணிகளை உள்ளே இருக்க வைத்து சித்திரவதைகள் செய்து வருகின்றனர். வவுனியா பேருந்துத்தரிப்பு நிலையத்தில் தான் பயங்கரவாதிகளின் ஆயுதக் கிடங்கு இருந்தததைப் போல். அவசரகாலச் சட்டமானது வவுனியா பேருந்துத் தரிப்பு நிலையத்தில் மட்டுந்தான் நடைமுறைப்படுத்தப்படுவதுபோல். அந்தளவிற்கு அதிகமான கெடுபிடிகளுக்கு எமது மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துகின்றபோது அதனை மனிதாபிமான முகத்துடன் செயற்படுத்த வேண்டும் என எவ்வளவு தான் கோரிக்கை விடுத்தாலும் நாயின் வாலை நிமிர்த்த முடியாது என்பது போல். அது தனது கொள்கையைவிட்டுக் கொடுக்காது தனது வழமை போன்ற செயற்பாட்டையே கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக எமது அப்பாவி மக்களே நாளாந்தம் பல்வேறு இடையூறுகளுக்கு ஆட்பட்டு வருகின்றனர்.

சாதாரண சட்டங்கள் செயற்பாட்டிலுள்ள நிலையில். பிரவேசிக்க இயலாத இலக்குகளுக்கெல்லாம் அவசரகாலச்சட்டம் அமுலில் இருக்கின்றபோது பிரவேசிக்க இயலும் என்கின்ற நிலைமையே இன்று இந்த நாட்டில் நிலவி வருகின்றது.

இந்த பிரவேசமானது இன்று வெளிநாட்டுச் சக்திகளின் உள்நாட்டு விவகாரங்களுக்கான தலையீட்டு பிரவேசங்களாகவும் மாறிவிட்டுள்ளன என்றே கருதுவதற்கு நேரிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழ்.நகரப் பாடசாலைகளுக்கு ஆளுநர் செயலணி திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்மித்த பாடசாலைகளுக்கு நேற்று வடமாகாண ஆளுநர் செயலணியினர் திடீர் விஜயம் மேற்கொண்டனர்.

யாழ்.நகரப் பாடசாலைகள் சிலவற்றில் மாணவர்களிடம் முறையற்ற விதத்தில் நிதி அறவிடப்படுவதாக வடமாகாண ஆளுநர் செயலணிக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த விஜயம் மேற்கொள்ளப்பட்டதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்தன. (இ-10)

# சபாஷ் ஸ்மித்

## மீண்டெழுந்தது ஆஸி



ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றி ஆஸியின் முதுகெலும்பை உடைத்த இங்கிலாந்தின் பிரோட் விக்கெட் ஒன்றை கைப்பற்றிய மகிழ்ச்சியில்...

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய வீரர் ஸ்ரீவ் ஸ்மித் சதம் கடந்தார்.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் பேர்மிங்காமில் நேற்று ஆரம்பமாகியது. நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**பிரோட் அசத்தல்**

அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், பான்கிராப்ட் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. மறுபக்கம் இங்கிலாந்து 'வேகங்கள்' மிரட்டினர். பிரோட் வீசிய 4வது ஓவரில் ஆபத்தான வோர்னர் (2) ஆட்டமிழந்தார். அடுத்து பான்கிராப்ட்டை (8) வெளியேற்றினார். கவாஜாவை (13), வோக்ஸ் கவனித்து அனுப்ப, அணி 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது. ஸ்ரீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட் ஜோடி பொறுப்பாக விளையாடியது. 4வது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்கள் சேர்த்தபோது, வோக்ஸ் 'வேகத்தில்' ஹெட் (35) ஆட்டமிழந்தார்.

**ரசிகர்கள் கேலி**

கடந்த மார்ச் 2018ல் தென்னாபிரிக்க மண்ணில் பந்தை சுரண்டிய அவுஸ்திரேலியாவின் ஸ்மித், வோர்னர், பான்கிராப்ட் சிக்கினர். தடையிலிருந்து மீண்ட இவர்கள், நேற்று முதல் டெஸ்டில் பங்கேற்றனர். வோர்னர் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார். அப்போது, 'கலரியில்' இருந்த இங்கிலாந்து ரசிகர்கள் சிலர், உப்புத் தாளை காட்டி கேலி செய்தனர்.




சதமடித்து அவுஸ்திரேலிய அணியை தூக்கி நிறுத்திய ஸ்மித்

**ஸ்மித் அபாரம்**

பிரோட் வீசிய 40வது ஓவரில் அணித் தலைவர் பெய்ன் (5), பட்டின்சன் (0) என இருவரையும் வெளியேற்றினார். கம்மின்ஸ் (5) நிலைக்கவில்லை. 16 மாதத்திற்குப்பின், டெஸ்டில் பங்கேற்ற ஸ்மித் அசத்தினார். இவர் 24வது டெஸ்ட் சதம் அடித்தார். பந்தை சேதப்படுத்திய விவகாரத்தால் தடையிலிருந்து மீண்ட ஸ்மித், திறமையை அழுத்தமாக நிரூபித்தார். இவர் 144 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 284 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அதிகபட்சமாக பிரோட் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி, 10 ஓட்டங்கள் எடுத்து, 274 ஓட்டங்கள் பின்தங்கி இருந்தது. பேர்ன்ஸ் (4), ஜேசன் ரோய் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



காயத்துக்கு சிகிச்சை மேற்கொள்ளும் இங்கிலாந்தின் அண்டர்சன்

**அண்டர்சன் காயம்**

முதல் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன், நான்கு ஓவர் மட்டுமே வீசினார். இவரது வலது தொடைப்பகுதி பின்பகுதியில் காயம் (தசைபிடிப்பு) ஏற்பட்டது. இதன்பின், களத்திலிருந்து வெளியேறிய இவர், மீண்டும் பவுலிங் செய்யவில்லை. இன்று அண்டர்சனுக்கு 'ஸ்கான்' எடுக்கப்பட உள்ளது.

# யாருக்கு எந்த இடம்

## இந்திய அணியில் எதிர்பார்ப்பு



இந்தியா, விண்டீஸ் அணிகள் மோதும் முதல் 'ரி20' போட்டி நாளை புளோரிடாவில் நடக்கவுள்ளது. இதற்கான இந்திய 'லெவன்' அணியில் யார் யார் களமிறங்குவர் என்பது குறித்து பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள இந்திய அணி, விண்டீஸ் அணிக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. அடுத்த ஆண்டு 'ரி20' உலக கிண்ணத் தொடர் நடக்கவுள்ள நிலையில் இந்திய அணியை இப்போதிருந்தே தயார் செய்கின்றனர்.

இதனால் 11 பேர் கொண்ட அணியில் யார் யாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

ரோகித் சர்மா, அணித் தலைவர் ஹோலி இடத்துக்கு உலக கிண்ணம்வரை சிக்கல்வராது. 2019 ஐ.பி.எல்., தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களில் 4வது இடம் பெற்றவர் ஷிகர் தவான். கடந்த இரு சீசன்களில் 'ரொப் 3' பட்டியலில் வந்தவர் லோகேஷ் ராகுல்.

இந்த இருவரையும் 'ரொப் 4' பட்டியலில் தவிர்க்க முடியாது. ஒருவேளை இருவரும் இடம் பெற்றால் கோஹ்லி, துடுப்பாட்ட வரிசையில் 4வதாக வர வேண்டும். இந்த இடத்தில் ஹோலிசராசரிஓட்டக்குவிப்புகுறைவாகவே (30.36 ஓட்.,) உள்ளது.

ஐ.பி.எல்., தொடரில் பெங்களூரு அணிக்கு ஆரம்பம் தந்தவர் ஹோலி, 3வது இடத்தில் தான் (சராசரி 44.21) அதிகம் களமிறங்குவர். இதனால் தவான் அல்லது ராகுல் என யாராவது ஒருவர் வழி விட வேண்டும்.

**ரிஷாப் உறுதி**

தோனி விலகிய நிலையில் விண்டீஸ் தொடர் முழுவதும் ரிஷாப் பண்ட் தான் விக்கெட் காப்பாளராக செயல்படுவார். இவர் துடுப்பாட்டத்தில் ஐந்தாவதாக வர காத்திருக்கிறார். 'மிடில் ஓர்டரில்' சையது முஸ்தாக் அலி டிராபி தொடரில் அசத்திய ஸ்ரேயாஸ் ஐயர், ஐ.பி.எல்., இந்தியா 'ஏ' அணிக்காக சிறப்பாக செயல்பட்ட மணிஷ் பாண்டேவைத் தான் இந்தியா நம்ப வேண்டும். 'சகலதுறை வீரர்' இடத்தில் குர்னால் பாண்ட்யா களமிறங்கலாம்.

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் புவனேஷ்வர் குமார் மட்டும் சீனியராக உள்ளார். இவருடன் கலீல் அகமது, தீபக் சகார் அல்லது நவ்தீப் சைனிக்கு இடம் கிடைக்கும். சுழலில் ஐ.பி.எல்., தொடரில் கலக்கிய ராகுல் சகார் (13 விக்.,), ஜடேஜா (12) இடம் பிடிப்பரா அல்லது வழக்கம் போல சகால் (13 விக்.,), குல்தீப் (2 விக்.,) கூட்டணி தொடருமா என நாளை தான் தெரியும்.

# யார் புதிய வாத்தியார்

## இந்திய அணிக்கு...




இந்திய அணி பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் முடிந்தது. ஜெயவர்த்தன, ரொம் மூடி, லால்சந்த் ராஜ்புட் போட்டியில் உள்ளனர்.

இந்திய அணி பயிற்சியாளர் ரவி சாஸ்திரி, சஞ்சய் பாங்கர் (துடுப்பாட்டம்), பாரத் அருண் (பந்துவீச்சு), ஶ்ரீதர் (களத்தடுப்பு) உள்ளிட்ட 7 பேரின் பதவிக் காலம் வரும் மே. தீவுகள் தொடருடன் முடிகிறது. புதிய பயிற்சியாளர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம் முடிந்தது.

தற்போதுள்ள பயிற்சியாளர்கள் விண்ணப்பிக்கவில்லை என்ற போதிலும், தேர்வில் பங்கேற்கலாம். இதனிடையே 2007ல் இந்தியாவுக்கு 'ரி20' உலக கிண்ணம் வென்று கொடுத்த லால்சந்த் ராஜ்புட், ரொபின் சிங் (களத்தடுப்பு), பிரவீண் ஆம்ரே உள்ளிட்டோர் போட்டியில் குதித்துள்ளனர்.

சர்வதேச அளவில் ஜெயவர்த்தன (இலங்கை), ரொம் மூடி (ஆஸி.,), மைக் ஹெசன் (நியூசி.,) உள்ளிட்டோர் பயிற்சியாளராக விண்ணப்பித்துள்ளனர். தென்னாபிரிக்க முன்னாள் வீரர் ஜொன்டி ரோட்ஸ், களத்தடுப்பு பதவிக்கு போட்டியிடுகிறார்.

இவர்களில் சரியான பயிற்சியாளரை, சுப்ரீம் கோர்ட் வழிகாட்டுதல் படி நியமிக்கப்பட்ட கபில்தேவ் தலைமையிலான கிரிக்கெட் ஆலோசனை கமிட்டி தேர்வு செய்ய உள்ளது. தேர்வுக்குழு தலைவர் பிரசாத் தலைமையிலான குழு, மற்ற பயிற்சியாளர்களை முடிவு செய்ய உள்ளது. வரும் ஒக்., 22ல் இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ.,) தேர்தல் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன் பயிற்சியாளர் யார் என்பது முடிவு செய்யப்படலாம். தலைமை ப்யிற்சியாளராக மீண்டும் ரவி சாஸ்திரி தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு உள்ளது.

# 3 இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட ஆட்கொணர்வு வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல்

## சட்டமா அதிபர் திணைக்கள வாகனத்தில் தப்பியோடிய அரச புலனாய்வாளர்கள்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி இராணுவ முகாம் அதிகாரியால் கைது செய்யப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட 3 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் அதில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் மற்றும் சட்டத்தரணி எஸ்.சுபாசினி ஆகியோரை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து படம் எடுத்து' அரச புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுத்தனர்.

நீதிமன்ற வளாகத்துக்குள் அமைந்துள்ள சட்டத்தரணிகள் ஓய்வறைக்கு முன்பாக சட்டத்தரணிகள் இருவரும் உரையாடிக்கொண்டிருந்த போது அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்த அரச புலனாய்வாளர்கள் சட்டத்தரணிகளை தமது தொலைபேசியில் படம் எடுத்தனர்.

அதனைக் கண்ட சட்டத்தரணி குருபரன் அங்கிருந்தவர்களை உதவிக்கு அழைத்து படம் எடுத்தவர்களைத் துரத்திச் சென்ற போதும் அவர்கள் வாகனத்தில் ஏறித் தப்பித்துவிட்டனர்.

"சட்டமா அதிபர் திணைக்களத்தின் வாகனத்தில் பயணித்த அரச புலனாய்வாளர்களே எம்மை படம் எடுத்து அச்சுறுத்தல் விடுத்தனர். மேலதிக மன்றாடியார் அதிபதி செய்திய குணசேகர பயணித்த வாகனத்திலிருந்தும் புலனாய்வாளர் ஒருவர் படம் எடுத்தார். இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு முறைப்பாடு செய்யவுள்ளோம். அவர் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றோம்" என்று சட்டத்தரணி கலாநிதி குருபரன் தெரிவித்தார். (இ-10-101)

# பொதுஜன பெரமுன எம்.பிக்கள் முல்லைத்தீவுக்கு நேற்று விஜயம்



(பனிக்கன்குளம்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு உண்ணாப்புலவு பகுதியில் இடம்பெற்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துஷார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயந்த கோதாகொட மற்றும் சுசந்த புஞ்சிநிலமே ஆகியவர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் மற்றும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-281)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு மதுரம் முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மதுரம் கிட்ஸ் விளையாட்டு மைதானத்தில் முன்பள்ளித் தலைவர் எஸ்.கே.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், கௌரவ விருந்தினராக ஜே/259 கிராம உத்தியோகத்தர் சி.தயாபரன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# வடக்கு இளைஞர்களே இரண்டு மாதங்கள் பொறுங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த



வடக்கில் உள்ள இளைஞர்களே 2 மாதங்கள் பொறுமையாக இருங்கள் - எமது கட்சியின் உறுப்பினர் ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் ஒரு வருடத்திற்குள் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தை புனரமைத்து தருவோம் என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சருமான மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட அவர், கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தை பார்வையிட்டார். இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கின் கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகமான விளையாட்டு வீரர்கள் உள்ளனர். இங்கிருந்துதான் தர்சினி என்ற வீராங்கனையும் தெரிவானார். அவர் இப்போது உலக நாயகியாக சாதித்து வருகின்றார். இவ்வாறான இளைஞர்களுக்காக எமது அரசாங்கத்தினால் இந்த விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு இந்த விளையாட்டு மைதானத்தின் பணிகளை நான் விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த போது ஆரம்பித்து வைத்தோம். ஆனால் எம்மால் மேற்கொள்ளப்பட்ட 50 வீதமான பணியை தவிர வேறு பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. 10 வருடங்களாக இந்த மைதானம் இவ்வாறானதாகவே உள்ளது.

இந்த அரசாங்கம் என்னத்தை செய்கின்றது. நான்கரை வருடங்களாக இந்த விளையாட்டு மைதானத்தை அமைத்து மக்களுக்கு வழங்க முடியாது போயுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் நாடாளுமன்றில் பேசுவதில்லை. அவர்கள் அங்கு எதையும் பேச மாட்டார்கள். இந்த விளையாட்டு மைதானத்தை திறந்து மக்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் சிறீதரனிடமும் பலமுறை பேசியுள்ளேன்.

இங்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் எவரும் இது தொடர்பில் பேசுவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

## காரியவசத்திற்கு எதிராக சாட்சியம் வழங்கியதால் இடமாற்றம்

# கல்வி அமைச்சின் ஆணையாளர் நாயகம் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கிய காரணத்தால் தனக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை புத்தகங்களில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் புகைப்படம் பதிவு செய்யப்பட்டமை தொடர்பான முறைப்பாடு தொடர்பில் அவர் கடந்த 24 ஆம் திகதி சாட்சி வழங்கியிருந்தார்.

குறித்த சாட்சி வழங்கிய 24 ஆம் திகதி முதல் தன்னை இட மாற்றம் செய்ததாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டார். (இ-7)

# இராசி பலன்

02.08.2019

ஆடி 17, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

பிரதமை காலை 7.03 மணிவரை

துதியை பின்னிரவு 4.37 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 12.05 மணிவரை

சுபநேரம் 6.03-7.33 மணிவரை

இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு, புத |
| | | | சூரி, சுக் செவ், சந் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்
திருவோணம், அவிட்டம்
பகல் 12.05 மணிக்கு
சிங்-சந்

**மேடம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்கள் ஒளிவுமறைவின்றிப் பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச் சுமை கூடும் நாள்.

**கன்னி** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், சுப செலவுகள் கூடும் நாள்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவிகேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினரிடையே சில விவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வேலைச் சுமை கூடும் நாள்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையலாம்.

**மீனம்** உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

# சாவகச்சேரி வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுங்கள்

## அத்தியட்சகர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தனர்.

அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உதவுமாறு கோரியதற்கு அமைவாக இணைத் தலைவர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினர் தமது தேவைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இயன் மருத்துவ நிலையம் அமைக்கப்படல் வேண்டும், பற் சிகிச்சைக்கென கட்டடம் அமைத்து தனி அலகாக இயங்க வேண்டும், ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற விபத்து அதி தீவிர சிகிச்சை நிலையத்திற்கான மிகுதி வேலைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும், இரத்த வங்கி நிறுவப்பட வேண்டும்.

ஆய்வுகூடம் நவீன வசதிகளுடன் அமைய வேண்டும் ஆகிய முக்கிய கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை தென்மராட்சி பிரதேச செயலரிடம் கையளித்திருப்பதாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டயாழினி மகேந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை பளை தொடக்கம் நாவற்குழி வரையுள்ள பிரதேச மக்கள் நாடி வருகின்ற போதிலும் உரிய கட்டட மற்றும் தொழில்நுட்ப வசதிகள் இன்றி வைத்தியசாலை காணப்படுகிறது.

அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து அதி தீவிர சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டு நிதிப் பிரச்சினை காரணமாக தடைப்பட்டுக் காணப்படுகிறது.

இப்பகுதிகளில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்கள் அனைத்தும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு பின்னர் மேலதிக சிகிட்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. விபத்து அதி தீவிர சிகிச்சை நிலையப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்க வேண்டிய தேவைப்பாடு நிலவமாட்டாது எனவும் தெரிவித்தார். (5-30)

# தரம்-8 மாணவி மீது துஷ்பிரயோகம்; ஆசிரியர் மீதான வழக்கு தொடரும்

## அதிபர் உட்பட மூவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்மித்த பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவி மீது அதே பாடசலை ஆசிரியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் சம்பவத்தை மூடிமறைத்ததாக சந்தேகிக்கப்பட்ட அதிபர் மற்றும் இரு ஆசிரியர்களும் நிரபராதிகள் என யாழ்.நீதவான் நீதிமன்றம் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடுதலை செய்தது.

தரம் எட்டில் கல்வி கற்கும் குறித்த மாணவியை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியர் அச்சம்பவத்தை மூடிமறைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட அதிபர் உட்பட இரு ஆசிரியர்களைக் கைது செய்யக் கோரி கடந்த 3 வருடங்களுக்கு முன் பாடசாலை சமூகத்தால் போராட்டம் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களாகக் கருதப்பட்ட நால்வரையும் யாழ்.பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தி விளக்கமறியலில் வைத்தனர்.

குறித்த வழக்கானது சட்டமா அதிபரிடம் பாரப்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசாரணையின் போது அதிபரும் ஆசிரியர்கள் இருவரும் வழக்கிலிருந்து முற்றாகவிடுவிக் கப்பட்ட நிலையில், துஷ்பிர யோகத்தில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியர் மீதான வழக்கு மேலும் தொடரும் என யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ-10)




# அரசாங்க வீட்டுத் திட்ட வீடுகளில் சுவாமிஅறையைப் பெருப்பிக்கலாம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் வழங்குகின்ற வீட்டுத்திட்ட வீடுகளில் சுவாமி அறையைப் பெருப்பிக்க முடியும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறியால் முன்வைக்கப்பட்ட குறித்த தீர்மானம் ஒருங்கிணைப்புக்குழுவால் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இந்துக்களே அதிகமாக வாழ்கின்றனர். இந்து முறைப்படி சுவாமி அறை ஏனைய அறைகளை விட பெரிதாக இருக்க வேண்டும் என்பது இந்துக்களின் ஐதீகம். எனவே தான் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்ட அளவுகளில் இடம்பெற்று வருவதால் எதிர்கால அரச வீட்டுத்திட்டங்களில் குறித்த நடைமுறையைப் பின்பற்றுமாறு ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-10)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் 2019 ஆம் ஆண்டு 1 ஆம் பருவகால மீள் பரீட்சைக்கான (st semefter -2019 Repeat Exam) விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களை பெற்று சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி எதிர் வரும் 13 ஆம் திகதி ஆகும்.

எனவே அதற்கு முன் விண்ணப்பங்களை எமது நிறுவனத்தில் பெற்று பூர்த்தி செய்து நிர்வாகப் பகுதியில் வழங்குமாறும் மேலக விபரங்களுக்கு உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளுமாறும் யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன உதவிப் பதிவாளர் வை.திஷாந்தன் அறிவித் துள்ளார். (5)

# பட்டமளிப்பு விழாவிற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழாவிற்கு 2018 ஆம் கல்வியாண்டில் முழுமையாக கற்கைநெறியினை பூர்த்தி செய்த அனைத்து கற்கை நெறிகள் சார்ந்த மாணவர்கள் அனைவரும் 22 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணத்தினை பெற்று உரிய காலக்கிரமத்தில் பட்டமளிப்பு விழாவிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு உயர் தொழில்நுட்பவியல் நிறுவன உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பொது இடங்களில் புகைத்தல் பொருள் பாவனை, விற்பனைக்குத்தடை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பஸ் தரிப்பிடங்கள் ஆகியவற்றுக்கு அருகாமையில் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை ஆகியன தடை செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் காணப்படுகின்ற பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பஸ் தரிப்பிடங்களுக்கு அருகாமையில் புகைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை ஆகியவற்றை தடை செய்துள்ளோம். கடந்த ஜனவரி மாதம் வர்த்தக நிலையங்களுக்கான வியாபார அனுமதியைப் புதுப்பிக்கும் போது இது தொடர்பான அறிவுறுத்தலையும் அவர்களுக்கு வழங்கி இருந்தோம். மீறினால் எம்மால் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை தொடர்பாகவும் வர்த்தக நிலைய உரிமையாளர்க்ளுக்கு விளக்கியிருந்தோம். அதன் பின்னர் இதுவரை பாடசாலைகள் மற்றும் மத தலங்களுக்கு அருகாமையில் புகைப் பொருட்கள் விற்கப்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் எவையும் கிடைக்கவில்லை. அவ்வாறு பாடசாலைகளுக்கு அருகாமையில் புகைப் பொருள் மற்றும் போதைப் பொருள் பாவனை இடம்பெற்றால் அது தொடர்பாக சுகாதாரப் பிரிவினருக்கு தெரியப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

சாவகச்சேரி பிரதேசசபை இத் தீர்மானத்தை நிறைவேற்றி தற்போது இயன்றளவு நடைமுறைப் படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# வீட்டுத்திட்ட கொடுப்பனவுகளை வழங்க 90 மில்லியன் ரூபாய் தேவை மாவட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் இடம்பெற்று வரும் வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க 90 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக யாழ்.மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் வீட்டுத்திட்ட வேலைகள் மற்றும் பகுதியளவிலான புனரமைப்பு வேலைகளுக்கான முழுமையான நிதி இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை எனவும் கடந்த ஜூலை மாதம் குறித்த திட்டங்களுக்கான கொடுப்பனவாக 36 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்ற நிலையில் ஏனைய தொகை மிக விரைவில் கிடைக்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (5-10)




சாவகச்சேரி - டச் வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வேல் பவனியில் புரவி ஆட்டம், மயிலாட்டம், பாம்பாட்டம், கரகாட்டம், மரக்கால் ஆட்டம், பொம்மையாட்டம் மற்றும் காவடி ஆட்டம் ஆகிய தமிழர் பாரம்பரிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(படங்கள்:-சுபேசன்)

# அறநெறி வகுப்புக்களுக்குத் தடையேற்படுத்தும் தனியார் வகுப்புக்களை நடத்துவது அபகீர்த்தி!

## கர்தினால் உயர்நீதிமன்றில் இடையீட்டு மனு



(கொழும்பு)

தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவால், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ஞாயிறு, போயா தினங்களில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவதை தடுக்கும் வகையிலான, விடுமுறை திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று உயர்நீதிமன்றத்தில் இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்தார்.

அறநெறி வகுப்புக்களுக்குத் தடையேற்படும் வகையில் தனியார் வகுப்புக்களை நடத்துவது சகல கல்வித் துறைக்குமான அபகீர்த்தி என்றும் பேராயர் தெரிவித்ததுடன் தனியார் கல்வி நிறுவனங்கள் பணம் சம்பாதிக்கும் நிலையங்களாக மாறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்தத் திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் ஆசிரியரான சுதத் டியகுஆராச்சி உள்ளிட்ட பலர் உயர்நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வஹாப் வாதம் என்றால் என்ன? முதலில் தெளிவுபடுத்துங்கள்-முஜிபுர்





(கொழும்பு)

சஹ்ரான் பயங்கரவாதம் புரிய அல்குர்ஆன் காரணமாக இருந்தது எனக் கூறுவதாயின், 1988, 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த நாட்டில் விமல் வீரவன்ச பயங்கரவாதச் செயற்பாட்டில் ஈடுபட்டது பௌத்த தம்மபதவின் அடிப்படையிலா என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

பயங்கரவாதி சஹ்ரான் திரிபீடகத்தையோ, பைபிளையோ பின்பற்றியவர் அல்லர் எனவும், அல்குர்ஆனின் படி வஹாப் வாதத்தை பின்பற்றி நடந்தவர் எனவும் விமல் வீரவன்ச எம்.பி. பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந் துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்து கருத்துத் தெரிவிக்கையில் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. இவ்வாறு கூறினார்.

வஹாப் வாதம் எனறால் என்ன வென்று முதலில் தெளி வுபடுத்துமாறு இந்த வஹாப் வாதிகளைப் பற்றிக் கதை கூறும் நபர்களிடம் கேட்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாற்குடப் பவனி

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாளின் ஆடிப் பூரத் திருவிழா நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் அம்பாளிற்கு அபி ஷேக ஆராதனைகள் நடைபெற்று, பாற்குட நடைபவனியும் இடம் பெறும். (5-101)

## 6,695 சாரதிகள் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கைதுசெய்யும் விசேட நடவடிக்கையின் கீழ், இம்மாதம் 5 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை 6,695 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை 6 மணியிலிருந்து, நேற்றுக் காலை 6 மணி வரையான 24 மணி நேரத்துக்குள் 180 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (இ-7)


**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில்அமைந்துள்ள புடைவை நிலையம் ஒன்றிற்கு பெண்வேலையாட்கள்தேவை.

பழகியவர்களும், பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-7153)

உங்கள்

# வலம்புரி

*Valampurii*

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

தொலைபேசி 222 3378, 021 221 7603

website : www.valampurii.lk

Viber : 076 636 3378

20 ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேனையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

**இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்**

01.08.2019 தொடக்கம்

விளம்பரங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள உங்கள் வலம்புரி 20 ஆண்டு நிறைவில் இன்னும் புதுப்பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**




**நடராசா திலீபன்**
1 hr ·

ஒரு இனம் தன்னை தானே மீள் கட்டமைப்பு செய்தால் மட்டுமே நிலைத்திருக்க இயலும்.

**Siva Karan**
July 29 at 10:06 AM ·

தமிழர்கள் தமக்குள்ளே மோதிக்கொள்வது தமிழர்களின் பொது எதிரியான சிங்கள பௌத்த பேரினவாத அரசு தன்னுடைய பாதையில் சீராகப் பயணிக்க வழியமைக்கும். இந்த விடயம் சாதாரண குழந்தைக்கும் புரியும். ஆனால் அப்படியிருந்தும் சில அரசியல்வாதிகள் தமது கட்சி வளர்ப்பை மட்டுமே கரத்தில் கொண்டு தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு குந்தகமாக செயற்படுகின்றனர்.
அவ்வாறான அரசியல்வாதிகள் சிங்கள அரசுக்கு முண்டு கொடுப்பவர்களாகவே பார்க்கப்படுவது யதார்த்தம் தொப்பி அளவானவர்களுக்கு மட்டும்.

**சுப்ரமணிய பிரபா**
3 hrs ·

எது கிடைத்தாலும் எமக்கே கிடைக்க வேண்டும் என்று இழி மனநிலை கற்றோர் மத்தியிலும் இருப்பது கவலைக்குரியது.
தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி ஏற்கனவே அரச வேலையைப் பெற்றுக்கொண்டு பின் வேலையற்ற பட்டதாரிகளுக்கென வழங்கப்படும் அரச வேலைகளுக்கும் விண்ணப்பிக்கும் கீழ்த்தரமான புத்தி கற்றவர்களுக்கு இருப்பதானது சுத்த சுயநலம் சார்ந்தது.
இங்கே சிக்கியுள்ள இவர்கள் ஏற்கனவே பல்கலைக்கழக பட்டதாரிகளாக இருந்தும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் ஊடாக அல்லாமல் உயர்தரம் மற்றும் கல்வியியல் கல்லூரி சார் படிப்புக்களை மேற்கொண்டோருக் கென
வழங்கப்பட்ட நியமனத்தில் அரசவேலை பெற்றவர்கள் ஆவார்கள்.
அதாவது தமக்கு கீழே உள்ளவர்களுக்கு கிடைக்க வேண் டிய தன் தகைமைக்கு கீழான வேலையை ஏனைய வழிகளால்
தட்டிப்பறித்து தமக்காக்கிக் கொண்டவர்கள் ஆவார்கள்.
கற்ற கல்விக்கு வேலை கிடைக்காமல் பல ஆண்டுகளாக வேலைக்கென அலைந்து திரியும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளின் வாய்ப்பையும் தட்டிப்பறிக்கும் இவ்வாறானவர்களுக்கு தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**Yogesh Jo** is thinking about தமிழர் உரிமை
50 mins ·

"நில அபகரிப்பு
பண்பாட்டு
சிதைவுகளுக்கெதிராக
ஊருக்கு ஒரு
விழிப்புக்குழு அமைத்து
செயற்பட இளையோர்
முன்வர வேண்டும்"

**Makalinkam Veerakumar** is feeling sad in Maruthankerny, Sri Lanka.
April 13 ·

அரசாங்க அதிகாரிகள்
நேர்மை உடையவர்களாக
இருக்க வேண்டும்.
இன்று இவர்களில் பலருக்கு
நேர்மைக்கு வரைவிலக்கணம்
தெரிவதில்லை என்பது
மிகுந்த
மனவருத்தமளிக்கின்றது.

**Yogaratnam Ravinthiran**
July 28 at 10:47 PM ·

குரங்கின் கையில் சிக்கியுள்ள அப்பமரய் மாறிப் போயுள்ள தமிழர் அரசியல்.

**Kanagaratnam Sugash** is with Sugash Kanagaratnam.
July 30 at 7:23 PM ·

உலகத்தின் படு பயங்கரமான கழிவுகளை வலி.வடக்கில்
கொட்டி தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்து
தமிழினத்தை அழிக்க அரசாங்கமும் கைக்கூலிகளும்
முன்னெடுக்கும் திட்டத்தை முளையிலேயே
கிள்ளியெறியத் தயாராகுவோம்!!!

**அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி (01.08.2019) திகதி முதல் வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.**

### "மு.கா.இனியும் பழியைச் சுமக்க முடியாது"

# கல்முனை பிரச்சினைக்கு 10 ஆம் திகதிக்குள் தீர்வு

## சந்தர்ப்பத்தை தவறவிடவேண்டாம்– ஹக்கீம்

(கல்முனை)


**கல்முனையில் நீண்டகாலமாக இழுபறி நிலையிலுள்ள நிர்வாக அலகுப் பிரச்சினைகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் தீர்த்துக்கொள்வதற்கு முஸ்லிம் தரப்பும் தமிழ்த் தரப்பும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். மேலும் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டால், இதைப்போன்று இன்னுமொரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.**

கல்முனை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) நாடாளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் வழங்குவதற்கு நாங்கள் உத்தரவாதம் வழங்கியுள்ள நிலையில், கல்முனை எல்லைப் பிரச்சினையால் தொடர்ந்து இழுபறி நிலை ஏற்படுகிறது.

இந்த இழுபறி நிலையை இன்னும் நீடிப்பதற்கு அனுமதிக்க முடியாது. இருதரப்பும் சேதாரமில்லாத விட்டுக்கொடுப்புக்களை செய்து இன்னும் ஓரிரு நாட்களுக்குள் இதற்கு தீர்வு காணவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சாய்ந்தமருது விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இனியும் பழியை சுமக்க முடியாது. இதனை இன்னும் இழுத்தடித்துக்கொண்டிருக்க முடியாது. அதேநேரம் கல்முனைக்கும் அநீதி இழைக்கப்படாமல் தீர்வுகள் எட்டப்பட



வேண்டும். இவையிரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டுமென்றால் தமிழ்த் தரப்பும் முஸ்லிம் தரப்பும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தே ஆக வேண்டும். தமிழ் மக்களுடன் பரஸ்பரத்தைக் காட்டுவதற்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பம்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன மும்முரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். கல்முனை எல்லைப் பிரச்சினை முடிவுக்கு வந்தால், மறுநாளே சபைகளை பிரகடனப்படுத்துவதாக அவர் கூறியிருக்கின்றார்.

எனவே, தேர்தலுக்கு முன்னர் இதை சாதித்துக்கொள்வதில்தான் வெற்றி இருக்கின்றது. அடுத்த கட்டமாக கல்முனை மற்றும் மருதமுனை பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு தீர்மானித்துள்ளோம்" என ஹக்கீம் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், அலிஸாஹிர் மௌலானா, ஏ.எல்.எம்.நசீர், மு.கா. தவிசாளர் அப்துல் மஜீத், செயலாளர் நிஸாம் காரியப்பர், கல்முனை முதல்வர் ரகீப், மாநகர சபை உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேட்சைக் குழு உறுப்பினர்கள், சாய்ந்தமருது பள்ளிவாசல்தலைவர்வை.எம்.ஹனீபா, கட்சியின் உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (இ-7)

## யோகா பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஓம் பதஞ்சலி யோகா கேந்திராவின் யோகாசன பயிற்சி புதிய வகுப்புக்கள் நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். கந்தர்மடம் சந்தி, பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமய பேரவை மண்டபத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பானது, வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணிவரை இடம் பெறும். இதில் அனைத்து வயதினரும் கலந்து கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் அல்லது 077 494 0541 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# மணற்கா்டு மணல் வளத்தை அப்கரிக்க வனஜீவராசிகள் திணைக்களம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி கிழக்கு மருதங் கேணிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சவுக் கங்காடு அமைந்துள்ள மணற் காட்டுப் பகுதி மணல் வளத்தை அப கரிக்க வனஜீவராசிகள் திணைக் களம் பல்வேறு உத்திகளைக் கையா ண்டு வருவதாக தெரியவருகிறது.**

இதன் ஓர் அங்கமாக குறித்த பகுதியிலுள்ள 500 ஹெக்டேயர் சவுக்கங்காட்டை வனஜீவராசிகள் திணைக்களம் தமக்குரிய நில மாக மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

மணற்காடு மண் வளம் பறி போகுமானால் யாழ்.மாவட்டத் தில் இடம்பெறுகின்ற வீட்டுத் திட் டக் கட்டுமானப் பணிகள் யாவும் முடக்கப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

மணற்காட்டுப் பகுதியிலுள்ள 2 ஏக்கர் காணியில் இருந்து வீட் டுத் திட்டப் பயனாளிகளுக்கான மணல் விநியோகம் இடம்பெற்று வரும் நிலையில் வனஜீவராசி கள் திணைக்களம் 500 ஹெக் டேயர் பரப்பையும் அபகரித்தால் யாழ்.மாவட்டத்திற்குரிய வளம் வேறுபிரதேசத்துக்கு கொண்டு செல்லப்படும் நிலை ஏற்படும்.

குறித்த பிரதேசம் வனஜீவரா சிகள் திணைக்களத்தின் கட்டுப் பாட்டில் வருமானால் சம்பந்தப் பட்ட திணைக்களத்தின் ஒப்புதல் பெற்றே மணல் அகழ்வு இடம் பெறும் நிலை ஏற்படும்.

இவ்வாறான நிலை ஏற்படும் பட்சத்தில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது செல்வாக் கின் அடிப்படையில் இங்குள்ள மண் வளத்தை எமது மக்களின் பயன்பாட்டுக்கு வழங்காமல் அப கரித்துச் சென்று விடுவார்கள்.

எனவே தான் குறித்த விடயம் தொடர்பில் மக்களால் தெரிவு செய் யப்பட்ட பாராளுமன்ற உறுப்பி னர்களும் பிரதேச சபை உறுப்பி னர்களும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கை தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் என சமூக ஆர்வலர் கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-10)

# வருடாந்தம் 200 மில்லியனை அரசாங்கம் இழக்கின்றது

## கெமுனு விஜேரத்ன விசனம்



(கொழும்பு)


வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்துகளால் வருடாந்தம் 200 மில்லியன் ரூபாயை அரசாங்கம் இழப்ப தாக, தனியார் பேருந்து உரிமை யாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித் தார்.

அத்துடன் அதிவேக நெடுஞ் சாலைகள் ஊடாகப் பயணிக்கும் 150 இற்கும் மேற்பட்ட பேருந்து களுள் 87 பேருந்துகளுக்கு நிரந்தர வீதி அனுமதிப்பத்திரம் இல்லையென்றும் இது தொடர் பில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்ய தீர்மானித்ததாகவும் அவர் தெரி வித்தார்.

அதிவேக நெடுஞ்சாலை ஊடாக சட்டவிரோதமாக பண த்தை சம்பாதிப்பதற்காக, வீதி அனுமதிப்பத்திரத்துக்கான ஒப் பந்தத்தை கோராமல் அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை முன் னெடுக்கப்படுவதாகவும் இத னால், அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுவதாகவும் அவர் தெரி வித்தார். (இ-7)

# பொலித்தீன் மற்றும் சுவரொட்டிகள் இன்றி தேர்தல் நடவடிக்கையை முன்னெடுக்கவும்

## வேட்பாளர்களுக்கு நாமல் அறிவுரை



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் களமிறங்கும் அனைத்து வேட்பாளர்களும் தமது தேர்தல் நடவடிக்கையின் போது பொலி த்தீன் மற்றும் சுவரொட்டிகளின்றி சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற் படுத்தாத வகையில் செயற் படுமாறு சகல வேட்பாளர்க ளிடமும் நாடாளுமன்ற உறுப்பி னர் நாமல் ராஜபக்ஷ கோரி க்கை விடுத்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்த லுக்காக அனைத்துக்கட்சிகளும் தயாராகி வருகின்றன. பலர் தாம் ஜனாதிபதி வேட்பாளர்க ளெனவும் சிலர் ஜனாதிபதி வேட் பாளராகவும் முயற்சிக்கும் நிலையில், பொதுஜன பெரமுன 11 ஆம் திகதி ஜனாதிபதி வேட் பாளரை பெயரிடும் எனவும் நாமல் தெரிவித்தார். (இ-7)

## குறை'களை' பதிகம் 76

### கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமோ!

ஐந்தாம் ஆண்டு பரீட்சையும்
ஏ எல் பரீட்சையும்
இந்தா நடக்கப் போகிறது
தெரிந்தும் ஐயகோ
சந்தாகாரரும் உபயகாரரும்
சேர்ந்து சந்திக்குச் சந்தி
ஒலிபெருக்கிகள் கட்டி-எம்
சந்ததிக்கு சாவுமணி
அடிப்பது போல
சுந்தரமான மாணவ
மாணவிகளை- இந்தச்
சோதனைக்கும் படிக்க விடாது
எழுதவிடாது
சோணைக்காதுகள்
அடைக்கும்படியாக
பாதகம் செய்து பக்திப்பாடல்களை
சாதகம் செய்யவா குளறவிடவேண்டும்?

எத்தனை தவமிருந்து
பெத்தவர் விழித்திருந்து
சொத்துக்கள் அடகு வைத்து
சோதனையை எழுதும் போது,
இத்தகு அட்டூழியம் கண்டு
இறைவா நீயும்
பெத்தவர் நோகும்படி
பிள்ளைகள் கருகும்படி
அத்தனை பாட்டுக்களையும்
அலறவிட்டால்
ஆன்மீகம் தழைக்குமா

இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
நீங்காத இறைவனை
லெவுட்ஸ்பீக்கர் கட்டி
பாட்டுப் போட்டால்
கேட்டவரம் கிடைத்திடுமா?
கௌரவம் வந்திடுமோ?

கோயிலெல்லாம் ஸ்பீக்கர் என்றால்
குடாநாடு பெறுபேற்றில்
கோட்டைவிடுவது
ஏது செய்தாலும்
தடுக்கவே முடியாது

சந்திக்குச் சந்தி
சத்தமாகக் கோண் கட்டினால்
சமயம் இனி
சட்டத்தின் பிடியில்
சிக்குமே தவிர
சாமியின் சாபத்திற்கும்
ஆளாவது நாம் தானே!

**கே.எஸ்.சிவஞானராஜா**

**அன்பு வாசகர்களே!**
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க முடியாத சூழலில் ஐ.தே.க

## ரஞ்சித் சொய்சா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்ய முடியாத சூழ்நிலைக்கு ஐ.தே.க. தள்ளப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ் சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக் கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா ஜனாதிபதி தேர்தலை 2019ஆம் ஆண்டு இறுதி மாதகால பகுதியில் நடத்த, தேர்தல் திணைக்களத்தின் தலை வரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது ஆட்சியில் இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட் பாளரை தெரிவு செய்யும் நட வடிக்கையில் கட்சிக்குள் பாரிய பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் ஐக்கிய தேசி யக் கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் சஜித் பிரேமேதாஸ என ஒருபுறம் கூறுகிறார்கள்.

கட்சியின் உதவி தவிசாளர் ரவி கருணாநாயக்க, சஜித் பிரே மதாஸ ஜனாதிபதி வேட்பாளர் இல்லை என கூறுகிறார். வேறு ஒரு குழுவினர் கூறுகிறார்கள் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க ஜனா திபதி வேட்பாளர்.

திடீரென நவீன் திஸாநாய க்க, புதிய ஜனாதிபதி மேல் நாட்டில் இருந்து வரவேண்டும் எனவும் கூறுகிறார். நுவரெலியா மாவட்டத்தில் சிங்கள மக்க ளுடைய வாக்குகளை மாத்திரம் பெற்று நாடாளுமன்றம் சென்று அமைச்சரான ஒரே நாடாளு மன்ற உறுப்பினர் நான் தான் என மார்பு தட்டிகொள்கிறார்.

ஆனால் எங்களுக்கு தெரி ந்தவரையில் நுவரெலியா அனைத்து மக்களும் ஒற்றுமை யாக வாழ்கின்ற ஒரு மாவட்டம். நவீன் திஸாநாயக்க கூறுவதை போல் சிங்கள மக்களுடைய வாக்குகளை மாத்திரம் தான் பெற்றதாக கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ)

# குளத்து நீர்மட்டம் குறைவதால் முல்லை. நன்னீர் மீனவர்கள் பாதிப்பு



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக வவுனிக்குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளதால் இக்குளத்தின் கீழான நன்னீர் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் நீர் வற்றிக்காணப்படுவதுடன், இதன் கீழான போகப்பயிர்ச்செய்கைகளும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற வவுனிக் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்து செல்கின்றது.

அதாவது 26 அடி நீர் கொள்ளளவைக் கொண்ட இக் குளத்தின் கீழ் காலபோக பயிர்ச் செய்கையின் பின்னர் 3400 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதனாலும் தற்போதைய கடும் வெப்பம் வரட்சி காரணமாக நீரின் ஆவியாதல் தன்மையும் அதிகளவில் காணப்படுகின்றது.

இதனால் குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்து வருவதனால் இக்குளத்தின் கீழான மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட 180 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் தற்போது 30 வரையான தொழிலாளர்களே தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் ஏனைய தொழிலாளர்கள் தொழிலின்மை, குடும்ப வறுமை என்பவற்றால் தென்பகுதிகளுக்கு கூலி வேலைகளுக்கு சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மீனவர்கள் தற்போது தொழிலில் ஈடுபட்டு வருகின்ற தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபாவுக்கும் குறைந்தளவான தொழில் வருமானங்களே கிடைப்பதாகவும் பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணங்களைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# மன்.நகர சபை ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(மன்னார்)

மன்னார் நகரசபை சுகாதார தொழிலாளர்கள் மற்றும் சாரதிகள் நேற்றுக் காலை மன்னார் மாவட்ட செயலக முன்றலில் அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் நகரசபையின் கீழ் சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும் 44 ஊழியர்களுக்கு கடந்த 2003 ஆம் ஆண்டு மன்னார் ஜீவபுரம் பகுதியில் முன்னைனாள் பிரதேச செயலாளரினால் காணி வழங்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு காணித் துண்டுகளுக்கான படமும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட நிலையில் 15 வருடங்கள் ஆகியும் இதுவரை குறித்த துப்புரவு பணியாளர்களுக்கு குறித்த காணிகளுக்கான உறுதிப்பத்திரமோ அல்லது வீட்டுத்திட்டமோ அடிப்படை வசதிகளோ இதுவரை செய்யப்படவில்லை எனவும் தாங்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுவதாகவும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளை சந்திக்க முற்படுகின்ற போதும் அவர்களைச் சந்திக்க முடியாமல் வெளியேற்றப்படுகின்றோம் என தெரிவிக்கின்றனர்.

என்வே தங்களது நிலையை கவனத்தில் கொண்டு தங்களின் நியாயமான கோரிக்கைகளான 2003 ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்ட 44 பேருக்கும் காணி உறுதிப்பத்திரங்களை உடன் வழங்க வேண்டும்.

அளவீடு செய்து ஒதுக்கப்பட்ட காணிகளை பிறருக்கு வழங்குவது உடன் நிறுத்தப்படல் வேண்டும். காணிக்கு புதிதாக விண்ணப்பித்துள்ள 15 சுகாதார தொழிலாளர்களுக்கும் காணிகள் உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

காணி வழங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வீட்டுத்திட்டம், மலசலகூடம், மின்சாரம் மற்றும் நீரிணைப்பு கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படை கோரிக்கைகளை நிறைவேற்றித் தர நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதுடன் குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் நேற்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் கையளிக்கப்பட்டது. (9-285)

# மன்.மறைமாவட்ட ஆயர்-அமைச்சர் றிஷாட் சந்திப்பு



(மன்னார்)

அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பு இடம் பெற்றது.

அமைச்சருடன், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் றிப்கான் பதியுதீன், மன்னார், மாந்தை மேற்கு,முசலி பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆயருடனான சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி, மன்னார் மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழில்நுட்ப ரீதியிலான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல், இனங்களுக்கிடையில் சுமுகமான ஒற்றுமை, மாவட்டத்திற்கு தேவையான அடிப்படை தேவைகள், மீனவர், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆயருடன் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாகவும், எதிர் காலத்திலே இந்த மாவட்டத்தில் கத்தோலிக்க, இந்து,இஸ்ஸாம் ஏனைய மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தி சேர்ந்து செயற்பட பல்வேறு நல்ல ஆலோசனைகளை ஆயர் முன்வைத்தார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (9-285)

# கடும் வரட்சியால் பயன்தரு மரங்கள் அழிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பெருமளவான பயன்தரு மரங்கள் அழிவடைந்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிவரும் வரட்சி காரணமாக பொதுமக்களுக்கான குடிநீர் முதற்கொண்டு பல்வேறு பாதிப்புக்கள் காணப்படுகின்றன.

இதனைவிட தற்போதைய வரட்சி நிலைமை காரணமாக பெருமளவான பயன்தரு மரங்கள் அழிவடைந்து வருகின்றன.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில், யூனியன் குளம் ஆகிய கிராமங்களில் நிலவும் கடும் வரட்சி காரணமாக இப்பகுதிகளிலுள்ள தென்னை பயிர்கள் மற்றும் ஏனைய பயன்தரு மரங்கள் அழிவடைந்து வருகின்றன.

கடந்த ஆண்டுகளில் இவ்வாறு வரட்சி காரணமாக பெருமளவான பயன்தரு மரங்கள் அழிவடைந்த போதும் எந்த விதமான இழப்பீடுகளும் கிடைக்கவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (9-315)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி தீ விபத்தினால் வீடு முற்றாக எரிந்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஒளிரும் வாழ்வு அமைப்பு, அலைக்ஸ் கிளப் இணைந்து அத்தியாவசிய பொருட்களை வழங்கி வைத்தனர்.

இக்குடும்பத்திற்கு நியூசிலாந்தினை தளமாகக் கொண்டு இயங்கும் பாலன் அறக்கட்டளை நிறுவனத்தினால் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத் தகரம், சீமெந்து, மரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

(படம்-அக்கராஜன் செய்தியாளர் )




# மத்தியஸ்தர் சபை இடமாற்றம்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு மத்தியஸ்த்தர் சபை அமர்வுகள் 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக எதிர்வரும் 04.08.2019 அன்று புதுக்குடி யிருப்பு கலைமகள் மண்டபத்திலும் அதனை தொடர்ந்து உயர்தரப் பரீட்சை நடக்கவிருப்பதால் மறு அறிவித்தல் வரை ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் நடைபெறும் என தவிசாளர் வி. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.(9)

# கிளி. தருமபுரம் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவேண்டும்

## வடக்கு ஆளுநர் உத்தரவு

(கிளிநொச்சி )

கிளிநொச்சி தருமபுரம் பிரதேச வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவை இரண்டு மாத காலத்துக்குள் மக்கள் பாவனைக்கு கையளிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் வட மாகாண ஆளுநர் செயலகம் நேரில் சென்று அவதானித்ததுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்துள்ளது.

குறித்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டடம் அமைக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை பயன்பாடின்றிக் காணப்படுவதாக கடந்த மாதம் 25 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலக அதிகாரிகள் குறித்த வைத்திய சாலைக்குச் சென்று பத்திரிகையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

இந் நிலையில் குறித்த வைத்திய சாலையுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவனங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்து க்கு கொண்டுவரப்பட்டு குறித்த கட்டடத்தை இரண்டு மாதங்களுக்குள் மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கக் கூடிய நிலையில் கையளிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாக ஆளுநர் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (9-10)

# வவுனியாவில் 607 குடும்பங்கள் குடிநீர் இன்றி அவதி

(நெளுக்குளம்)

வவுனியாவில் 607 குடும்பங்களைச் சேர்ந்த 2013 பேர் குடிநீர் இன்றி வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான குடிநீர் மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் வழங்கி வைக்கப்பட்டு வருவதாக மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் நேற்று முன்தினம் மாலை வரையான காலப்பகுதியில் 607குடும்பங்களைச் சேர்ந்த 2013 பேர் குடிநீர் இன்றி பாதிப்படைந்துள்ளதாக கிராம அலுவலகரினால் பிரதேச செயலகங்களுக்கு அறிக்கையிடப்பட்டு மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்கு புள்ளிவிபரத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பகுதிகளிலுள்ளவர்களே அதிகமான வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு பாதிப்பை எதிர்கொண்டுள்ளவர்களுக்கான குடிநீர் வழங்கும் நடவடிக்கை அந்தப் பகுதிகளில் தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட்டு தண்ணீர் தாங்கிகளூடாக தண்ணீர் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட செயலகத்திலுள்ள பௌதீக வளங்களை வைத்து விரைவாக இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இன்னும் வரட்சியுடனான கால நிலை நீடித்துச் செல்லுமாக இருந்தால் பாதிப்படைபவர்களின் தொகை இன்னும் அதிகரிக்க வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில்குளங்களில்தண்ணீர் சேகரிக்கும் திட்டம் எவையும் இன்றுவரையிலும்மேற்கொள்ளப்படவில்லை. இத் திட்டத்தினை மேற்கொள்வதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அவ்வாறான ஒரு நடவடிக்கை கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இன்று வவுனியாவில் வரட்சி ஏற்பட்டிருக்காது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதில்லை. சகல திணைக்களங்களிலுமுள்ளவர்கள் கலந்து கொள்வதும் இல்லை. மக்களின் அத்தியாவசிய பிரச்சினை ஒன்றினை கூட்டத்தில் முன்வைத்தால் அதற்கான பதிலை வழங்குவதற்கு கூட்டத்தில் அத்திணைக் களத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டு பதிலை வழங்குவதில்லை என்றும் பொதுமக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். (9-299)

# பொன்விழா

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா இன்றும் நாளையும் பாடசாலை மைதான அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி. இ.ரவீந்திரநாதன் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ள முதல்நாள் நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். யாழ். மாணவர் சங்கச் செயலாளர் றெஜி அலோசியஸ் தலைமையில் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பாடசாலையின் பழைய மாணவியும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமுமான பி.எச்.எம். சாள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார். (9)

# விதைப்போம் உழைப்போம் உயர்வோம் செயற்றிட்டம்



(அக்கராயன்)

கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயத்தில் விதைப்போம், உழைப்போம், உயர்வோம் விசேட செயற்றிட்டம் நேற்று முன்தினம் "விதை" எனும் தலைப்பில் காவேரி கலா மன்றத்தின் அனுசரணையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

பாடசாலைகள் சமூகத்தின் ஒரு பகுதி என்ற வகையில் சமூகத்திற்கான பங்களிப்பை மேற்கொள்ளும் நோக்குடன் மாணவர்களுக்கிடையே கற்றலுக்கு அப்பால் சமூக மாற்றத்திற்கான நல்ல செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் மேற்படி செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இயற்கைச் சூழலை பகைத்துக்கொள்ளாத, அதேவேளை உழைப்பின் ஊடாக உயர்வை நோக்கிப் பயணிக்கின்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 81 ரூபாவுக்கு 12 முருங்கை விதைகள் வழங்கப்பட்டு அவற்றை அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 25 நாட்கள் பராமரித்து பின்னர் நேற்று முன்தினம் அதில் ஒன்றை வீட்டிற்கும் மற்றொன்றை பாடசாலைக்கும் வழங்கியதோடு மிகுதி 10 முருங்கைக் கன்றுகளை 700 ரூபாவுக்கு பாடசாலை பெற்றோர்களிடம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

முருங்கைக் இலையை அறுவடை செய்வதனை நோக்காகக் கொண்டு குறித்த கன்றுகளை வளர்க்க வேண்டும் எனவும் மூன்று மாதங்களுக்குப் பின்னர் முதற் அறுடையை தொடர்ந்து தொடர்ச்சியாக பத்து முருங்கை மரங்கள் மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் பத்தாயிரம் வரை வருமானத்தைப் பெற முடியும் எனவும் செயற்றிட்ட ஆசிரியர் டிலோஜன் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி. மாணிக்கவாசகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி ரி.யேசுவா, கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம், ஆசிரிய ஆலோசகர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-350)




# துருணு திரிய திட்டத்தில் 6 பேருக்கு கடன் உதவி

(பனிக்கன்குளம்)

"துருணு திரிய" இளம் தொழில் முனைவோருக்கான இலங்கை வங்கியின் கடன் திட்டத்தினூடாக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 6 தொழில் முனைவோருக்கான கடன் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.


முல்லைத்தீவு மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் மேற்பார்வை உத்தியோகத்தர் ப.தர்மேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் கோ.தனபாலசுந்தரம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், இலங்கை வங்கியின் புதுக்குடியிருப்பு முகாமையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கி வைத்தனர்.

இத்திட்டத்தின் ஊடாக இது வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர் என்பதுடன் மொத்தமாக 28 பேர் இத்திட்டத்தினூடாக நன்மையடைந்துள்ளனர். (9-281)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மல்லாவி மத்திய கல்லூரியில் மல்லாவி மத்திய கல்லூரி பழைய மாணவனான அருளானந்தம் மயூரனது ஞாபகார்த்தமாக அவருடைய குடும்பத்தாரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட துவிச்சக்கர வண்டி தரிப்பிட தொகுதியும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் youth with talent திட்டத்தினூடாக பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் தொகுதியும் நேற்று முன்தினம் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

(படங்கள்-பனிக்கன் குளம் செய்தியாளர்)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலையரங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.பி.சேவியர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் மற்றும் விருந்தினர்களாக மடு வலயக்கல்வி பணிப்பாளர் க.சத்திய பாலன், பழைய மாணவன் ஜீவகுமார் கலந்து சிறப்பித்ததுடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர். (படம்-மன்னார் செய்தியாளர்)

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கிளி/பொலிஸ் அத்தியட்சகருடன் சிந்தனையாளர் குழு சந்திப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட சிந்தனையாளர் குழுவினர் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சர் ஜெயந்த ரத்நாயக்கவை சந்தித்து மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையக்காலமாக இடம் பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக வாள்வெட்டு, கொள்ளை, கஞ்சா, கசிப்பு, குழுச் சண்டைகள், சட்டவிரோத மணல் அகழ்வு, காடுகள் அழிப்பு போன்ற விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் செயற்பாடுகள் பற்றியும்கலந்துரையாடப்பட்டது.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து, மது,புகைத்தல் உள்ளிட்ட அடிப்படை சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் சிந்தனையாளர் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் தான் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தல் தொடர்பில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் வருங்காலத்தில் மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்த அவர் இவ்வாறான கலந்துரையாடலும் பரஸ்பர ஒத்துழைப்பும் பொலிஸ் திணைக்களத்திற்கு அவசியம் எனவும் குறிப்பிட்டார். மேலும் கிளிநொச்சியில் சில பிரதேசங்கள் குற்றச் செயல்கள் அதிகம் உள்ள பிரதேசங்கள் என்றும் அப்பிரதேசங்களில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார். (9-350)

# கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய பொன்

## ஆசிச்செய்தி

"கற்றதனால் ஆயபயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்று வள்ளுவன் வழியினிலே நின்று 1969 ஆம் ஆண்டு கனகபுரம் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையானது மிகச் சிறந்த முறையில் இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கிளிநொச்சிப்பகுதி மாணவர்களுக்காக ஆசிரியர் உட்பட நலன்விரும்பிகள் இதில் அக்கறை கொண்டிருப்பது எமது எதிர்கால சந்ததியினரை நல்வழியில் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்கால நலமுடன் வாழவும் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக வருவதற்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக.

**கிரியாதத்வந்தி சிவஸ்ரீ-கு.இரத்தினேஸ்வரக் குருக்கள்,**
**சாமிநாத குருகுல அதிபர், திருநகர்-கிளிநொச்சி**

## ஆசிச்செய்தி

போரின் கோரத்தாண்டவமதில் சிக்குண்டு சின்னாபின்னமாகியும் தளராத தற்துணிவுடன் நிமிர்ந்து நின்று அரை நூற்றாண்டாக செல்வங்களுள் சிறப்பான செல்வமான கல்விச் செல்வமதை எம் எதிர்காலத் தலைமுறைக்கு ஊட்டி வரும் கிளி/கனகபுரம் மகா வித்தியாலய பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இக்கல்விக்கூடக் குடும்பத்திற்கு எனது பொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவித்து உங்கள் மகிழ்வில் நானும் இணைகின்றேன்.

**அருட்திரு யோ.அ.யேசுதாஸ்,**
**கிளி.மறைமாவட்ட முதல்வர்,**
**சென்.திரேசா ஆலயம்,கிளிநொச்சி.**

## வாழ்த்துச்செய்தி

இப்பொன்விழாக் காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் கனகபுரம் மகா வித்தியாலய சமூகத்தினராகிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொறுப்பான கல்வி நிர்வாகிகள் அனைவரும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும் என்ற வேண்டுதலுடன் அனைவருக்கும் பொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**கலாநிதி சுரேன் ராகவன், ஆளுநர், வடமாகாணம்.**

## வாழ்த்துச்செய்தி

இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தின் மத்தியில் அமைந்துள்ள கிளி/கனகபுரம் மகா வித்தியாலய பாடசாலையானது இவ்வருடம் தனது 50 ஆவது அகவை நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சி மட்டுமல்லாமல் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தனக்கென தனி இடம்பிடித்துள்ள இப் பாடசாலையானது மென்மேலும் வளர வாழ்த்துவதோடு ஐம்பதாவது ஆண்டு விழாவும் சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

**திருமதி.விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
**கல்வி இராஜாங்க அமைச்சர்,**
**யாழ் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு**
**இணைத்தலைவர்.**

## வாழ்த்துச்செய்தி

கனகபுரம் என்ற மண்ணினதும், கிளிநொச்சி மாவட்டத்தினதும் அடையாளமாக பலதரப்பட்டோரின் இரத்தத்தாலும், வியர்வையாலும் உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலை பல்வேறு இடர்களையும் இன்னல்களையும் தாண்டி, காலத்திற்கு காலம் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளுக்குள் தானும் அகப்பட்டபோதும் அவற்றிலிருந்தெல்லாம் மீண்டெழுந்து ஐம்பது ஆண்டுகளை கடப்பதென்பது சாதாரண விடயமல்ல. அது ஒரு வரலாற்றுப்பதிவு. இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு பரந்து விரிந்த அளவில் கல்விப்பணிக்கும், சமூகப் பணிக்கும் அணிசெய்யும் இப்பள்ளி மென்மேலும் வளரவும், உயரவும் மனதார வாழ்த்துகிறேன்.

**சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**இணைத்தலைவர் - கிளிநொச்சி மாவட்ட**
**ஒருங்கிணைப்புக்குழு, கிளிநொச்சி.**

## வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழா காணும் இந் நேரத்தில் மாணவர்களும் பாடசாலையும் சகல வள நிறைவையும் பெற்று, வளமிகு தேசத்தில் சக்திமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

பொன்விழாவைக் கொண்டாடும் இவ் இனிய தருணத்தில் பாடசாலையின் சகல வளர்ச்சியிலும் உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

**அங்கஜன் இராமநாதன், முன்னாள் விவசாய பிரதி அமைச்சர்,**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**இல. 80A, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச்செய்தி

அரை நூற்றாண்டு காலத்தை நிறைவு செய்துள்ள இந்தப் பாடசாலைக்குச் செழிப்பானதொரு அடையாளமும் வரலாறும் உண்டு. கனகபுரத்தின் உருவாக்கத்தோடு இணைந்ததாக இந்தப் பாடசாலையின் வரலாறு இணைந்துள்ளது. ஆகவே கனகபுரத்தின் வளர்ச்சியோடு இந்தப் பாடசாலையின் வளர்ச்சியும் அமைந்திருக்கிறது.

எதிர்வரும் ஆண்டுகளில் இந்தப் பாடசாலையின் மாணவர்கள் எட்டப் போகும் சாதனைப் பெறுபேறுகள் இந்தப்பாடசாலையில் கணித, விஞ்ஞான உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான கதவுகளைத் திறக்கும் என நம்புகின்றேன். இன்று ஐம்பதாவது ஆண்டு நிறைவில் மகிழ்ந்து களிக்கும் கனகபுரம் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியிலும் பணிகளிலும் என்றும் நாம் இணைந்திருப்போம்.

**முருகேசு சந்திரகுமார் (முன்னாள் பாராளுமன்ற**
**உறுப்பினர், தலைவர், சமத்துவம் சமூக**
**நீதிக்கான மக்கள் அமைப்பு)**

## வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா மலருக்கு எமது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1969 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 1C தர பாடசாலையான கனகபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வது மாத்திரமன்றி விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்குவதுடன் மாவட்ட மற்றும் மாகாண மட்ட போட்டிகளில் சிறந்த வெற்றிகளைப் பெற்றுள்ளனர் என்பதனையும் கலை மற்றும் வர்த்தகத் துறைகளில் முன்னணி தொழில் வாண்மையாளர்கள், கல்வியாளர்கள், உள்ளிட்ட பல சிறந்த பிரஜைகளை இப்பாடசாலை உருவாக்கியிருக்கின்றது என்பதனையும் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

"உலகை மாற்றுவதற்கான மிகவும் பலம் வாய்ந்த ஆயுதம் கல்வியே ஆகும்" என்று நெல்சன் மண்டேலா குறிப்பிடுகின்றார். அந்த வகையில் சிறந்த கல்விக்கே மனிதனை மாற்றும் பலம் உள்ளது என்பதே எனது நம்பிக்கையாகும். பொன்விழா காணும் கனகபுரம் மகா வித்தியாலய மாணவர்களின் வேண்டுகோளின் பேரில் எனது வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை மைதானத்தினை கடந்த வருடம் திறந்து வைத்த நிகழ்வானது பசுமையானதொரு நிகழ்வாக எனக்கு நினைவிருக்கின்றது.

கல்விப் பணியில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழா கொண்டாடும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இச்சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் உயர்வுக்காக உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை இப்பாடசாலை எதிர்காலத்திலும் வெற்றிப் பாதையில் பயணிக்க எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ மைத்திரிபால சிறிசேன**
**ஜனாதிபதி.**

## வாழ்த்துச்செய்தி

மிகுந்த வளப்பற்றாக் குறைகளின் மத்தியில் கல்வி கற்று நிறைந்த பல பதவிகளை வகிக்கும் பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தின் முற்போக்கு சிந்தனையாளர்களாக, சமூகத்தின் வழிகாட்டிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் பழைய மாணவர்கள் சார்பாக இன்றைய மாணவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது "நீங்கள் சகல வசதிகளும் கிடைக்கும் காலகட்டத்தில் கல்வி கற்கிறீர்கள். உங்களுக்கு கிடைத்த இந்த உயர்வான வாய்ப்பினைப் பயன்படுத்தி நாட்டின் எதிர்கால பொறுப்புக்களை ஏற்கத் தயாராக வேண்டும்" என்பதாகும். என்னைப் போன்ற பல சகோதர உறவுகளின் அறிவுக்கண்ணைத் திறந்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய கனகபுரத் தாயின் மாணவ, மாணவியர் பலர் மென்மேலும் பல சாதனைகளைப் புரிந்து வையகம் போற்ற வாழ்கவென வாழ்த்துகிறேன்.

**திரு. கனகேந்திரம் இளவழகன்,**
**கனகபுரம் மகாவித்தியாலய பழைய**
**மாணவர்சங்கத்தின் சர்வதேச இணைப்பாளர்.**

## வாழ்த்துச்செய்தி

கனகபுரம் மகா வித்தியாலயத்தில் பொன்விழாவைக் கொண்டாடுவதற்காக பழைய மாணவர்கள் தனிப்பட்ட வகையிலும் க.பொ.த (சா/த) பிரிவு ரீதியாகவும், குடும்பங்களாகவும் மேற்கொண்டு வரும் பாரிய அபிவிருத்தி திட்டங்களினூடாக சாதனை மிகு பாடசாலையாக தரமுயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடம்பெறவிருக்கும் பொன்விழா நிகழ்வு சிறந்த முறையில் இடம்பெறவும், எதிர்பார்க்கும் பாடசாலையாக இனிவரும் காலங்களில் வளர இறைவனை பிரார்த்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.அ.றெஜிஅலோசியஸ், செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்.**
**கனகபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி.**


## வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலை பொன்விழாவை கொண்டாடும் இவ்வேளையில் பாடசாலை சமூகத்திற்கு எனது வாழ்த்து க்களை தெரிவிப்பதில் பேருவகை அடைகிறேன்.

பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் துரித பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்வேறு வளப்பற்றாக்குறைகளை பூர்த்தி செய்யும் முகமாக பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் 17.5 மில்லியன் ரூபா பெறுமதியான பல கட்டுமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு பாடசாலை சமூகத்திடம் கையளித்துள்ளனர்.

இதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பொன்விழா சிறப்புற சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்வோரும் அனைத்து பாடசாலை சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துக்கள். பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அனைவரும் கரம் கோர்த்து உழைப்போம்.

**இ.அமல்ராஜ்,**
**யாழ்.மாவட்ட உதவித்தேர்தல்கள் ஆணையாளரும்,**
**பொன்விழா ஏற்பாட்டுக்குழு தலைவரும்.**



**பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட துரித பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட் வேலைத்திட்டங்கள்**

| இல | நிதிப் பங்களிப்பு | வேலைத் திட்டங்கள் |
|---|---|---|
| 01 | 1978,1979,1980 பிரிவு | சரஸ்வதி சிலை |
| 02 | 1993 பிரிவு | மைதான மதில் திருத்தமும் மைதான மலசலகூடம் அமைத்தலும் |
| 03 | 1989 பிரிவு | உள்ளக சூழல் சீர் செய்தலும் அழகுபடுத்தலும் |
| 04 | 1995 பிரிவு | மைதான மின்னொளி |
| 05 | 2011 பிரிவு | கண்காணிப்பு Camera பொருத்துதல் |
| 06 | 1990 பிரிவு | சிற்றுண்டிச்சாலை |
| 07 | 2008 பிரிவு | வகுப்பறை (60அடி) கட்டட திருத்தம் |
| 08 | பழைய மாணவர்கள் | மதில் வெள்ளை அடித்தலும் முன்புறம் வர்ணம் பூசுதலும் |
| 09 | 1984 பிரிவு | வீதியோர நடைபாதை அமைத்தல் |
| 10 | 1997 பிரிவு | பாடசாலை பெண்கள் மலசலகூடம் அமைத்தல் |
| 11 | 1988 பிரிவு | மைதான கிணறு அமைத்தல் |
| 12 | பழைய மாணவர்கள் | உள்ளக பாதை |
| 13 | திரு.திருமதி.தில்லையம்பலம், மதன்கண்ணா குடும்பம் | நினைவு தூபியும் சூழ உள்ள பகுதி நடைபாதையும் |
| 14 | திரு.இராஜசுந்தரம் குடும்பம் | துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் |
| 15 | திரு.தேவகுமார் குடும்பம் | மைதான அரங்கு |
| 16 | Dr.சுகந்தன் குடும்பம் | திறன் வகுப்பறை |
| 17 | திரு.நாகலிங்கம் குடும்பம் | நூலகத்துக்கான தளபாடம் |
| 18 | திரு.பீன்ரன் குடும்பம் | 02 குழாய்க்கிணறு அமைத்தல் |
| 19 | கௌரவ பா.உ.சிறீதரன் அவர்கள் | வரவேற்பு வளைவும் வாயிற்கதவும் |
| | | சிறுவர் பூங்கா |
| 20 | பழைய மாணவர்கள் World Vision | வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசுதல் |
| 21 | நியூலலிதா நகை மாளிகை | உள்ளக பிரதான பாதை |
| 22 | கரைச்சி பிரதேசசபை | பாடசாலை வீதி மின்னொளி |
| | | பாடசாலை வீதி திருத்தம் |
| 23 | பழைய மாணவர்கள் | 600அடி வேலி தூண் இட்டு அமைத்தல் |
| 24 | கனகபுரம் கிராம அபிவிருத்தி சங்கம் | கொடிக்கம்ப பீடம் |
| மொத்தம் | | |

## வாழ்த்துச்செய்தி

பாடசாலையின் உயர்வுக்காக பல்வேறு வகையிலும் இணைந்து எந்நேரமு செயலாற்றும் பெற்றோர்கள் கிடைத்தமை பெரும் பலமாகும். பாடசாலை அமைந்துள் கிராமம் கனகபுரமாக இருந்த போதும் இங்கே கற்கும் மாணவர்களில் அதிகமானோ தொலைவிலுள்ள ஏனைய பல கிராமங்களை ஊட்டப்பிரதேசமாகக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். பல்வேறு சவால்களின் மத்தியில் எமது பாடசாலை மாணவ கல்வியில் சாதனைகளினை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் அனைவரு ஒன்றிணைந்து உழைத்தால் வெற்றியின் உச்சத்தினை எட்ட முடியும் என்பதும் ஐயமில்லை

எமது கிராமத்தின் மூத்தோர் பலர் பாடசாலை உயர்வுக்காகப் பல்வே வகையிலும் உழைப்பவர்களாகவும் எம்மை ஊக்கப்படுத்தி எமக்கு உறுதுணையா இருப்பவர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும். தமது உட பொருள் நேரத்தினையும் தமது கல்லூரித் தாய்க்காக அர்ப்பணித்து அழகுபடுத்தி பல்வே கட்டுமானங்கள் அமைத்து இறும்பூதடைந்திருக்கும் பாடசாலையின் தாய்நாட்டிலு புலம்பெயர்நாட்டிலும் வசிக்கும் பழைய மாணவர்களிற்கு உளமார்ந்த நன்றிகள்.

இந்நிகழ்வினைச் சிறப்பிப்பதற்காக என்னுடன் இணைந்துழைத்த நல விரும்பிகள், பெற்றோர்கள், பிரதிஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்க ஏற்பாட்டுக் குழுவினர்கள் அனைவரிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். மேலும் உரியகாலத்தி மலர்வெளியீட்டுக்காக உழைத்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் பழைய மாணவர்களுக்கு அழகுற அச்சிட்டுத் தந்த பழைய மாணவன் தெ.அமிர்தகரன் (விஸ்டா 8 பிறிண்டேர்ஸ உரிமையாளருக்கும், ஊழியர்களிற்கும்,நூலிற்கான நிதிப் பங்களிப்புச் செய்த தி திருமதி எம்.சீவரத்தினம் குடும்பத்தினருக்கும் நன்றியுடன் பாராட்டினைத் தெரிவிக்கின்றே

**திருமதி.இ.ரவீந்திரநாதன், அதிபர்,**
**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

## மலர் அனுசரணை


**கிருபா லேணர்ஸ்**
சாரதி பயிற்சிப் பாடசாலை

225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 - 222 - 4353, 021 - 492 - 3200, 077 - 722 - 5292

இல.216, A9 வீதி வவுனியா (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 - 222 7777, 0777 - 100 - 444

A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 - 228 - 5505, 071 - 454 - 6955

கண்டி வீதி, சாவகச்சேரி 021 - 227 - 0700, 021 - 492 - 3202

விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. 021 - 300 - 6550, 071 - 454 - 6957

இல.227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அண்மையில்) 021 - 224 - 2022, 071 - 454 - 6956



வாழ்த்துவோர்

பார்த்தீபன் ஆட்ஸ் — இல.29, கனகபுரம் வீதி, கிளிநொச்சி, 077 740 2847

நியூ பிரியங்கா நகைமாளிகை — A9 வீதி, கிளிநொச்சி. 021 228 5433, 077 717 5059

நர்மதா கோல்ட் சென்டர் — A9 வீதி, நீதிமன்றம் முன்பாக, கிளிநொச்சி.

PAVETHRAN DISTRIBUTORS — No. 132/1,5th Farm, Kanagapuram,Kilinochchi

Vista 8 Printes — No.D116,Ramanathan Road, Kaladdy Junction, Jaffna.

லோகன் பந்தல் — திருநகர், கிளிநொச்சி. 077 734 9253

பிள்ளையார் வண்ணச்சோலை — A9 வீதி, கிளிநொச்சி. 021 228 5789

சுவர்ணா டெயின்ற் & ஹாட்வெயார் — கனகபுரம்வீதி, கிளிநொச்சி 077 326 8381

அஸ்வின் புகைப்படக்கலையகம் — இல.12, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

சிந்து புடவையகம் — கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

Cool Cafe — A9 Road, Kilinochchi.

# ான்விழா சிறப்பு மலர் - 02,03 ஓகஸ்ட் 2019



### கடந்த காலத்தில் பழைய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

| இல | நிதிப் பங்களிப்பு | வேலைத்திட்டங்கள் |
|---|---|---|
| 01 | பழைய மாணவர்கள் | 720அடி சுற்று மதில் |
| 02 | திரு. கடம்பசோதி குடும்பம் | 600அடி சுற்று மதில் |
| 03 | கௌரவ மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அவர்கள் | 180அடி சுற்று மதில் |
| 04 | 1991 பிரிவு மாணவர்கள் | நீர்த்தாங்கியும் நீர்பிரயோக அமைப்பும் |
| 05 | பழைய மாணவர்கள் | 1500அடி மதில் பூச்சு |
| 06 | பழைய மாணவர்கள் | கணனிக்கூடம் |
| | மொத்தம் | |

### பொன்விழா ஏற்பாட்டுக்கான பங்களிப்பு விபரம்

| இல | நிதிப் பங்களிப்பு | வேலைத்திட்டங்கள் |
|---|---|---|
| 01 | 2005 O/L | மாணவர்களுக்கானபரிசளிப்புஞையை கௌரவிப்பு |
| 02 | 2(XX) பிரிவு | கௌரவிப்பு முன்னாள் ஆசிரியர்கள் |
| 03 | பார்த்தீபன் Arts | அழைப்பிதழ்வரவேற்பு வளைவு Banner (பனர்) |
| 04 | கலைக்குடும்பம் | மலர் வெளியீடு |

| | |
|---|---|
| பொன்விழாவை முன்னிட்டு பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் துரித பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களின் பெறுமதி | 16.5 மில்லியன் |
| பொன்விழா ஏற்பாட்டுக்கான பொறுப்பேற்கப்பட்ட வேலைகளின் பெறுமதி | 1.1 மில்லியன் |
| பொன்விழா ஏற்பாடுகளுக்காக பழைய மாணவர்கள் , பெற்றோர், நலன்விரும்பிகள், வர்த்தகர்களிடம் பெறப்பட்ட நிதி (மலர் அச்சிடப்படும் தினம் வரை) | 2.1 மில்லியன் |
| முழு மொத்தம் | 19.7 மில்லியன் |

### வாழ்த்துச்செய்தி

பொன்னான காலமது
பொன்னையா முதல் ஆசான்
தொடக்கி வைத்த பள்ளித்தாயே
இவளுக்கு அகவை ஐம்பது
தாயே உனது கருவிலிருந்து
ஆயிரம் ஆயிரம் தலைவர்களை உருவாக்கி
உன்பணி தொடர்கின்றதே தாயே
உனது பணி பொன்னானது
பொன்விழா காணும் உன்னை
வாழ்த்தி ஆசிச்செய்தி கூற
நான் என்ன புண்ணியம் செய்தேன் தாயே
மென்மேலும் உனது பணி தொடர
மனமுருகி வாழ்த்துகின்றேன்.
வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

**திரு. தி. மகேந்திரம், பா. அ. ச. செயலாளர்,**
**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்.**

### வாழ்த்துச்செய்தி

இப் பாடசாலையில் கல்விகற்ற பழைய மாணவர்கள் உயர் பதவிகளில் இன்று கடமை புரிந்து கொண்டிருப்பது இப்பாடசாலையின் பெருமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகின்றது. மேலும் எமது சமூகத்திற்குரிய நன்மாணாக்கர்களை உருவாக்குவதில் இப் பாடசாலை உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பாடசாலை கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் மென்மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைக்கவும், விழா சிறப்பாக நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இளங்கோவன், செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

### வாழ்த்துச்செய்தி

தற்பொழுது இப்பாடசாலையானது மாவட்டத்தின் பெருமையைப் பறைசாற்றும் முகமாக கல்வி, இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி நிற்பது பாராட்டுதலுக்குரிய விடயமாகும் இப் பாடசாலை மேலும் பல்வேறு மட்டங்களில் வளர்ச்சியடைந்து சிறந்த பலசாதனைகளை நிலைநாட்டி பல நூற்றாண்டுகளைக் கடந்து பயணிக்கவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,கிளிநொச்சி மாவட்டம்.**

### வாழ்த்துச்செய்தி

இப் பாடசாலையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மலரை வெளியிடுவதிலும், பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் இப் பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்தமையிட்டு வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். இப்பாடசாலை கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் மென்மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைக்கவும், விழா சிறப்பாக நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன், முன்னாள் செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

### வாழ்த்துச்செய்தி

இப்பாடசாலையானது மாணவர்கள் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டி வருகின்றனர். இப் பிரதேசத்தில் வாழும் மாணவர்களுக்கு கடந்த 50 வருடங்களாக சிறந்த கல்வியை இப்பாடசாலை வழங்கி வருகின்றது. பொன்விழா காணும் இவ்வேளையில் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**

### வாழ்த்துச்செய்தி

ஒரு சமூகத்தின் இருப்பை, அதன் புகழை, அதன் சமூக பண்பாட்டு பெறுமானங்களை விருத்தி செய்வதில் பாடசாலைகளே நிலைக்களங்களாக விளங்குகின்றன. அவ்வகையில் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம் தன் சீரிய பணியை கடந்த 50 ஆண்டுகளாக நிறைவேற்றி இன்று பொன்விழாக் கண்டு குதூகலிக்கின்றது.

இத்தகு சிறப்புக்களைப் பெற்ற இப்பாடசாலை மேலும் பல சிறப்புக்களை பெற்று கல்வியில் உயர்ந்த சீரிய சமூகத்தை உருவாக்கும் கலைக்கூடமாக மிளிர வேண்டும் என பொன்விழாக்காணும் இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

**த.முகுந்தன், பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், கரைச்சி.**

### வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மண்ணின் கல்விச்சாலையான கனகபுரம் மகா வித்தியாலயம் அதன் அகவை 50 ஆவது ஆண்டில் பொன்விழாக்காணும் இவ் இனிய சந்தர்ப்பத்தில், பள்ளிச் சமூகத்தை வாழ்த்துவதில் மகிழ்வும் நிறைவும் அடைகிறோம்.

இத்தகைய கிளிநொச்சி மண்ணின் புகழ் பூத்த கல்லூரியான, கனகபுரம் மகாவித்தியாலயம் பொன்விழாக்கண்டு பூரித்து நிற்கும் இவ்வேளை, கரைச்சி பிரதேச சபை தனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் கல்வி சமூகத்தினருக்கு பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அருணாசலம் வேழமாலிகிதன், தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

### வாழ்த்துச்செய்தி

11.11.1969 இல் ஆரம்பிக்கப்பட்ட கனகபுரம் அ.த.க பாடசாலையானது 11.11.1994இல் குறித்த காலத்திலேயே தனது வெள்ளிவிழாவை கொண்டாடியமை மிகவும் சிறப்பம்சமாகும். அதுவும் கனகபுரம் மகா வித்தியாலயம் என்ற பெயருடன் 1710 மாணவர்களுடன் திகழ்ந்தமை மகிழ்ச்சிக்குரியது. வெள்ளி விழாவிற்கு முற்பட்ட 5 ஆண்டு காலப்பகுதி யில் 114 மாணவர்கள் க.பொ.த (உ/தர) வகுப்பில் கல்வி கற்க தகுதி பெற்று பள்ளிக்கும் கனகபுரம் கிராமத்திற்கும் மிகவும் பெருமை சேர்த்தனர். இந்த மாணவர்களில் பெரும்பான்மையினர் இன்று எமது மாவட்டத்திலேயே பல உயர் பதவிகளிலிருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த பொற்காலத்திலே அர்ப்பணிப்புடன் அதிபராக சேவையாற்றிய திரு.ச.ஆறுமுகதாஸ் அவர்களை இந் நேரத்தில் யாரும் மறந்துவிடல் ஆகாது. வெள்ளிவிழா காலம் பொற்காலம் போல. அதற்கு மேலாகவும் பள்ளித்தாயின் வளர்ச்சி மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன்.

**க.முருகவேல், முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்**
**கிளிநொச்சி.**

### வாழ்த்துச்செய்தி

கிளி/ கனகபுரம் மகா வித்தியாலய ஐம்பதாவது ஆண்டு பொன்விழா சிறப்புற மனமார வாழ்த்துகிறேன். இப் பள்ளியின் வரலாற்று நிகழ்வானது மாணவர்களின் வளர்ச்சியின் படிக்கற்களாகவும் பாடசாலையின் அபிவிருத்தியாகவும் திகழ்கின்றது. நான் இப்பாடசாலையில் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றினேன். இடப்பெயர்வின் போது ஆசிரியர்களினதும் மாணவர்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலம் நல்ல பெறுபேற்றினை அடைந்தோம்.

கற்றல் செயற்பாடு. இணைபாட விதான செயற்பாடு ஆகியவற்றில் வெற்றி கண்டோம். நான் அந்நிய தேசத்தில் வாழ்ந்தாலும் தற்போதும் இப்பாடசாலை வாழ்க்கை என் கண்முண்ணே வந்து செல்லும். எல்லோரும் ஒன்றிணைந்து பாடசாலை மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு.க.ஆறுமுகதாஸ், முன்னாள் அதிபர்,**
**கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்.**




ஹரேகிருஷ்ணா ஹாட்வெயார் - இல.15/2, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
SUN FURNIY CITY - A9 வீதி, கிளிநொச்சி. 021 228 3300
நியூ லலிதா நகைமாளிகை - A9 வீதி, கிளிநொச்சி.
மல்லிகா உணவகம் - இல.10, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
ஸ்ரீராம் நகைமாடம் - A9 வீதி, கிளிநொச்சி.
குரு ஹாட்வெயார் - இல.175, A9 வீதி, கிளிநொச்சி.
நண்பர்கள் விருந்தகம் - 4ம் குறுக்கு வீதி, கனகபுரம், கிளிநொச்சி.
யாழ் அகி ஐஸ்கிறீம் - கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
எழிலகம் விற்பனை நிலையம் - A9 வீதி, கிளிநொச்சி.
முறுகண்டி பிள்ளையார் ஹாட்வெயார் - கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
AKSHAYA Pharmacy Grocery - பிரதான வீதி, கிளிநொச்சி.

# எதிர்ப்புச் சட்டத்தால் ஒருபோதும் பயங்கரவாதத்தை ஒழிக்கவே முடியாது

## ரணிலுக்கு சுசில் இடித்துரைப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்தின் கருத்திற்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகளின் கருத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தாக்குதலின் பின்னணியில் யார் உள்ளார்கள் என்பதில் சர்ச்சை நிலவும் பட்சத்தில் எவ்வாறு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த கேள்வியெழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளது. ஆகையால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் ஒருபோதும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியாது. மாறாக பயங்கரவாதத்தை வலுப்படுத்துமென சுசில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா அதிகரிக்க முடியாதளவு பொருளாதாரம் வீழ்ச்சி - தினேஷ்



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா அதிகரிக்க முடியாதளவுக்கு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றுள்ளதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, அரசாங்கத்தின் நிகழ்வுகளுக்கு கோடிக்கணக்கான பணம் விளம்பரத்துக்காக செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் என்பது மேலதிக சட்டமாகும். அதனைப் பயன்படுத்திக்கொண்டு தேவையான சட்ட திட்டங்களை மேற்கொண்டிருக்கவேண்டும். ஆனால் அரசாங்கத்துக்கு அதனை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது. தாக்குதல் இடம்பெற்று 3 மாதம் கடந்தும் நாட்டுக்குத் தேவையான சட்டதிட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை இந்த அமைச்சரவைக்கு முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்துக்கு வீட்டுக்குச் செல்ல நேரம் நெருங்கி வருவதால் இது தொடர்பாக சிந்திப்பதற்கு முடியாமல் இருக்கின்றது.

அதேபோன்று கைது செய்யப்பட்டவர்களைச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தி இருந்தால் இந்த அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடித்துக்கொள்ள தேவை ஏற்பட்டிருக்காது. அத்துடன் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை இன்னும் அரசாங்கத்துக்கு கீழ் கொண்டுவர முடியாமல் போயுள்ளது என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சுகாதாரப் பணியாளர்கள் கவனயீர்ப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் 12 கோரிக்கைகளை முன் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியில் கவனயீர்ப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதாரப் பணியாளர்களின் பதவி உயர்வைத் துரிதப்படுத்த வேண்டும், 180 நாட்கள் தொண்டர்களாக வேலை செய்தவர்களை நிரந்தரமாக்க வேண்டும். சீருடைக்கான கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும், ஒரு வாரத்தில் வேலை நாட்களை ஐந்து நாட்களாக ஆக்க வேண்டும்.

வாரத்துக்கு 40 மணித்தியாலயங்களுக்கு மேல் கடமை புரியும் அனைத்து மணித்தியாலயங்களுக்கும் மேலதிகக் கொடுப்பனவு வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து சுலோகங்களை ஏந்தியவாறு நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை இந்தக் கவனயீர்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் 14 நாட்களில் தீர்வு தராவிட்டால் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாசனை விஞ்ஞானம்

மலரும் நினைவுகள் என்ற வார்த்தையை இப்ப அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதைப் பற்றி இப்ப வேற விதமாக ஒரு ஆராய்ச்சி செய்வோம்.

மலருக்கும் நினைவிற்கும் சம்பந்தம் உண்டா? இதுதான் கேள்வி. இதற்கு உண்டு என்று தான் பதில் சொல்ல வேண்டிருக்கின்றது.

ஏனென்றால் வாசனைகளுக்கும் பழைய நினைவுகளுக்கும் தொடர்பு இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

நல்லதோ கெட்டதோ ஒரு நிகழ்ச்சி வாசனையோடு சம்பந்தப்பட்டிருந்தால் அது சுலபமாக மறந்து போறதில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இரண்டு நண்பர்கள் ஒரு தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். யார் வீட்டிலேயோ மசால் வடை போடுகின்ற வாசனை அவர்களுக்கு எட்டியிருக்கிறது.

உடனே அவர்களுக்கு பழைய ஞாபகம் வந்திருக்கிறது– மலரும் நினைவுகள்.

பாடசாலையிலே படித்துக் கொண்டிருந்த போது வகுப்பிலே மசால் வடையை மறைத்து வைத்து சாப்பிட்டு– அது வாத்தியார் கண்ணிலே பட்டு திட்டு வாங்கியது ஞாபகம் வந்தது.

ஒரு மசால் வடை வாசனை அந்த நண்பர்களை 25 வருடங்களுக்கு முன்னாடி அழைத்துக் கொண்டு போய் விட்டது.

இதுபோல் ஒவ்வொரு வாசனைக்கும் பழைய ஞாபகத்தை கொண்டு வருகின்ற ஆற்றல் இருக்கின்றதாம்.

ஜேர்மனியில் ஒரு காலத்தில் மக்களுக்கு குளோரின் வாசனை என்றாலே ஒரு வெறுப்பு.

அதனாலே அதை ஒரு வருட காலத்திற்கு வேண்டாம் என்று சொல்லி தள்ளியே வைத்திருந்தார்களாம். எதற்கும் பயன்படுத்துவதில்லையாம். ஏன் தெரியுமா?

குளோரின் வாசனை அடித்தாலே அவர்களுக்கு உலக யுத்தம் ஞாபகத்திற்கு வந்து விடுமாம். என்ன காரணம் என்றால் யுத்த சமயத்திலே குண்டு விழுந்த இடங்களை சுத்தப்படுத்துவதற்கு குளோரின் பயன்படுத்துகிறார்களாம்.

அதனால் அந்த வாசனை பழைய சோகத்தை ஞாபகப்படுத்தியிருக்கிறது. அதுதான் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். ஆண்களைவிட பெண்களுக்குத்தான் வாசனைகளைத் துல்லியமாக அறிகின்ற சக்தி இருக்கின்றது என்று ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஒரிரு சின்ன சோதனைகள் கூட செய்து பார்த்திருக்கின்றார்கள். குழந்தை பிறந்து 6 மணி நேரத்திற்குப் பின் அந்தத் தாயினுடைய கண்களைக் கட்டி விடுவது, அதன்பின் சில குழந்தைகளை அவரிடம் கொண்டு போவது, குழந்தையினுடைய வாசனையை வைத்து எது தன்னுடைய குழந்தை என்பதனை அந்த அம்மா சொல்லி விடுவாராம்.

அதேபோல் குழந்தைகளும் ரொம்ப புத்திசாலி! தாய்ப்பால் குடிக்கின்ற 6 வாரக் குழந்தைகள் வாசனை மூலமாகவே தாய் யார்? தாதிப் பெண் யார் என்பதனை கண்டுபிடித்து விடுகிறதாம்.

ஒரு திறமையான அம்மாவால் 8 வயது வரைக்கும் தன் குழந்தை யினுடைய ஆடைகளை வாசனை மூலமாகவே கண்டு பிடித்து விட முடியுமாம்.

இதற்கு என்ன காரணம் தெரியுமா? தாய்க்கும்– குழந்தைக்கும் உயிரியல்–உடலியல் அடிப்படையிலே ஒரேவிதமான வியர்வைச் சுரப்பிகள் தான் தோலில் இருக்குமாம். (ஆனால் கணவனுக்கும் மனைவிக்கும் அப்படி இருப்பதில்லை).

அந்தக்காலத்திலே எல்லாம் மனித உடம்பிலே உள்ள வாசனையை வைத்து அவருக்கு என்ன நோய் என்பதை கண்டு பிடித்தார்களாம்.

ஒருவருடைய மூச்சுக் காற்று பொருட்களை நொதிக்கச் செய்கின்ற அளவுக்கு இருந்தால் அவருக்கு ''கான்சர்!'' ஈரலிலே புண் இருந்தால் அந்த ஆளைச் சுற்றி பழத்திலே உட்காருகின்ற ஈக்கள் பறக்குமாம்.

ஆர்சனிக் விசம் குடித்தவன் மேலே பூண்டு வாசம் இருக்குமாம். இப்படி எல்லாம் சொல்லுகின்றது வாசனை விஞ்ஞானம். அதெல்லாம் இருக்கட்டும் வாசனை பழைய ஞாபகத்தைக் கொண்டு வரும் என்பதற்கு இன்னொரு உதாரணம்,

ஒரு அம்மா தன்னுடைய கணவரைப் பார்த்துச் சொன்னார்...எங்கேயாவது மல்லிகைப்பூ வாசனை வீசினால் எனக்கு பழைய கால ஞாபகம் வந்து விடுகின்றது. 30 வருடத்திற்கு முன்பு நமக்கு திருமணமான புதிதில் உங்கள் கைநிறைய மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தீர்கள் என்றார். பரவாயில்லையே மறக்காமல் இருக்கின்றாயே என்று சொல்லி ஆச்சரியப்பட்டார் அந்தக் கணவர். அதற்கு நீங்கள் தான் காரணம் என்றார் அந்த அம்மா.

அதன்பின் ஒரு தடவைகூட நீங்கள் பூவே வாங்கிக் கொடுத்ததே இல்லை. அதனால்தான் அதை மறக்கவே முடியவில்லை என்றார்.

# வல்வைப் படுகொலைகளின் 30 ஆவது ஆண்டு நினைவுகள்

அமைதி நிலவிக் கொண்டிருந்த வல்வெட்டித்துறையின் இயற்கைச் சூழலை நிர்மூலமாக்கும் வகையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பாரிய அழிவு நடவடிக்கையான "வல்வைப் படுகொலைகள்" வல்வெட்டித்துறை என்ற இந்துக்கள் வாழும் கிராமத்தில் அரங்கேற்றப்பட்டன.

1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2 ஆம் திகதி முற்பகல் 11.15 மணிக்கு வல்வெட்டித்துறை சந்தியில் இருந்து கேட்ட துப்பாக்கிகளினதும் மோட்டார்க் குண்டுகளினதும் பாரிய வெடியோசைகளால் ஊரே அதிர்ந்து கொண்டிருந்தது. அன்று சிவபுரவீதி வழியாகவும் காங்கேசன்துறை வீதி வழியாகவுமாக வல்வெட்டித்துறை ஊரிக்காடு முகாமில்





இருந்து ஏற்கனவே நடைமுறையில் இருந்த கனவான் ஒப்பந்தத்தையும் மீறி போராளிகளை தேடி அழிப்பதற்காக, முப்பந்தைந்து வரையான இராணுவத்தினர் கனரக ஆயுதங்களுடன் வந்து கொண்டிருந்தனர். இந்த இராணுவ அணிகளுக்கு ஊரிக்காடு முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சுதர்சன்சிங், துணைப் பொறுப்பாளர் கப்டன் கபூர், பொலிகண்டி முகாமின் பொறுப்பதிகாரிகப்டன் கோபால கிருஸ்ணமேனன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந் நிலையில், விடுதலைப் புலிகள் தற்காப்பு நடவடிக்கையாக இந்திய இராணுவத்தினரின் மீது சிவபுர வீதியில் வைத்துத் தாக்குதலை மேற்கொண்டதில் ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டும் பத்துச் சிப்பாய்கள் காயமடைந்தும் பின்னர் மூவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து சுமார் அரை மணித்தியாலங்கள் வரை அந்தப் பிரதேசம் எங்கும் மயான அமைதி நிலவியது.

அந்தச் சம்பவம் இடம்பெற்ற அரை மணித்தியாலங்களுக்குள் ஏற்கனவே திட்டமிட்டபடி தயாராக வைக்கப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வல்வெட்டித்துறையைச் சுற்றிவளைத்து மூன்று நாட்களுக்கு ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு வீடு வீடாகப் புகுந்து அங்கே இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்களையும், ஆவணங்களையும் கால்நடைகளையும் எரித்துக் கொண்டும் களவாடிக் கொண்டும் வந்தனர்.

அந்த நேரம் வீடுகளிலும் வீதிகளிலும் ஆலய வீதிகளிலும் கடற்கரையிலும் கண்ணில்பட்ட ஒவ்வொரு தமிழர்களையும் சுட்டும் வெட்டியும் வெறியாட்டமாடியபடி வந்தனர்.



ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பித்த மோதலைத் தொடர்ந்து, 4 ஆம் திகதி வரை யாருமே வல்வெட்டித்துறைக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ அல்லது ஊடகவியலாளர்கள் நிலைமைகளை வந்து அவதானிப்பதற்கோ இந்திய இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை.

1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற அந்தப் படுகொலைகளின் கொடூரத்தை உலகுக்கு வெளிப்படுத்துவதற்காக பாதிக்கப்பட்டவர்களின் சத்தியப்பிரமாணங்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் என்பவற்றை எடுத்துக்கொண்டு, விசைப்படகு மூலம் தமிழகத்திற்குச் சென்று, முதலமைச்சர் மு.கருணாநிதி, வை. கோபாலசாமி, பழ.நெடுமாறன், திராவிடர் கழகத்தலைவர் வீரமணி போன்ற பல தலைவர்களையும் சமதாகட்சியின் தலைவராகவும் பின்னாளில் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த ஜோர்ஜ் பெர்னான்டசைக் கடலூரிலும் சென்று சந்தித்து வல்வைப் படுகொலைகள் மற்றும் சொத்து அழிப்புக்கள் என்பவை தொடர்பான ஆவணங்களையும் புகைப்படங்களையும் கையளித்து, விரிவாக விளக்கியபொழுது அவரும் மிகவும் உன்னிப்பாகவும் அனுதாபத்துடனும் கேட்டார்.

அன்று ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தந்த உற்சாகமும் ஆதரவும் இந்திய இராணுவத்தினரின் கொடூரமான தாக்குதலை வர்ணிக்கும் விபரணச் சித்திரமான "வல்வைப் படுகொலை" நூலுக்கு முக்கியத்துவம் அளித்தது.

வல்வைப் படுகொலைகள் என்று தமிழிலும் "INDIA'S MYLAI" என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட வரலாற்று நூலின் பிரதிகளைக் கையளித்தபொழுது, அவற்றிற்கான அணிந்துரையை எழுதித்தந்தார். அந்த வரலாற்று நூல்களும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் எழுதித் தந்த அணிந்துரையும் இந்தியப்படையினர் ஈழத்தைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

1968 ஆம் ஆண்டில் வியட்நாமில் அமெரிக்க இராணுவத்தினரால் 350 இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் படுகொலைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்து அமெரிக்க அரசை நிலைகுலைய வைத்தவர்கள் அமெரிக்கர்களும் அமெரிக்க ஊடகங்களுமே என்பதை நினைக்கும்பொழுது பெருமையாகவும் அதேவேளை இந்தியப் படைகளினால், ஈழத் தமிழ்மக்கள் வகைதொகையின்றிப் படுகொலைகள் செய்யப்பட்ட பொழுது இந்திய மக்களும் இந்திய ஊடகங்களும் மௌனம் சாதித்ததை நினைக்கும் பொழுது கவலையாகவும் இருந்தது.

அதேவேளை இந்திய அமைதிப் படையினரால் வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பான விபரங்கள் அன்று "டெய்லி



டெலிகிராப்", "பைனான்சியல்டைம்ஸ்", "இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் வெளிவந்தபொழுது தான் உலகமே அந்தப் படுகொலைகளின் கொடூரத்தைப் புரிந்து கொண்டது.

ஈழத் தமிழர்கள் தமது தாய்நாடு என்றே நம்பிக்கை வைத்த இந்தியா, தம்மைக் காப்பாற்றும் என்று எதிர் பார்த்திருந்த மக்களை நயவஞ்சகமாகக் கொன்றொழித்து அவர்களின் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு அழிவை ஏற்படுத்திய இந்தியாவை இன்றும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஜாலியன் வாலாபார்க் மைதானத்தில் 379 இற்கும் அதிகமான பொதுமக்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொன்ற பிரித்தானிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்காக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே பாராளுமன்றத்தில் வருத்தம் தெரிவித்தது போன்று இலங்கையின் வடபுலத்தில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான படுகொலைகளுக்காக இந்தியாவும் ஒரு நாள் வருத்தம் தெரிவிக்கும் என்று நம்புகின்றோம்...!



வல்வை. ந.அனந்தராஜ்

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

16

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**தொடர்மாடி வீடொன்றை வாங்குபவர்கள் அவ் வீட்டின் உட்புறம் பற்றி மாத்திரம் கவனம் செலுத்துகின்றனர். அதன் உறுதிப்பத்திரம் தமக்கு எப்போது கிடைக்கும் என்பதைப்பற்றி அறிந்திருப்பதில்லை. அல்லது தாம் வீடு கட்டுபவரால் (developer) உறுதிப்பத்திர விடயத்தில் ஏமாற்றப்படப்போகிறோம் என்பதை அறியாமல் உள்ளனர் .**

மேற்படி ஆவணங்களிலிருந்து எத்தனை மாடிகள், எத்தனை இருப்பிடக்கூறுகள் **(Apartments)** அங்கீகரிகப்பட்டுள்ளன போன்ற பல தகவல்கள் வீட்டைக் கொள்வனவு செய்பவருக்கு தெரியவரும்.

வீடுகளை கொள்வனவு செய்பவர்கள் மேற்கூறிய விடயங்களில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். ஆனால் வீடுகளை கொள்வனவு செய்பவர்கள் இதுபற்றி எவ்வித கவனமும் செலுத்தாமல் வீட்டையும் மற்றும் அதன் உட்புறம் பற்றி மாத்திரம் கவனம் செலுத்திவிட்டு வீட்டின் உறுதிப்பத்திரத்தை பெற முடியாமல் தவிக்கிறார்கள். இவர்கள் தாம் கொள்வனவுசெய்த வீட்டுக்கான/ அலகுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லையென கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு முறையிடுகிறார்கள். கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபை இம் முறைப்பாடுகளை விசாரணை செய்த வேளையில் பின்வரும் விடயங்கள் வெளியாகியுள்ளன.

➢ உள்ளூராட்சி சபையால் அங்கீகரிக்கப்பட்ட கட்டடப்படத்தில் **(Building Plan)** உள்ள மாடிகளின் எண்ணிக்கையைப் பார்க்கினும் அதிகமான மாடிகள் அனுமதிபெறாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை.

➢ கீழ் மாடியில் வாகனத் தரிப்பிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்தின் எண்ணிக்கை /அளவு குறைக்கப்பட்டு அங்கு அலுவலகம், கடை போன்றவை அனுமதி பெறாமல் நிர்மாணிக்கப்பட்டு விற்பனை செய்துள்ளமை.

➢ பொதுக்கூறுகளில் ஒன்றான வீட்டுக் கூரையில் வேறு கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை.

➢ இருபிடிக்கூறுகளில் வாங்குபவர்களின் விருப்பத்திற்கே கட்டத்தில் சிறுசிறு மாற்றங்களைச் செய்யும் நிறுவனங்கள் அம் மாற்றங்களை சட்டவரைகளுக்கேற்ப அதற்கான அனுமதியைப் பெற்றுச் செய்யாமை.

➢ தொடர்மாடி வீடுகளுக்கான நீர் மற்றும் மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் சட்டபூர்வமான தனித்தனி வீடுகளுக்கு தனித்தனியாக இணைப்புக்களைக் கொடுக்காமல் ஆரம்ப நிர்மாணத்தறுவாயில் வழங்கப்பட்டுள்ள இணைப்பிலிருந்து சட்டவிரோதமாக மேற்படி இணைப்புகளை வழங்கியுள்ளமை.

**வீடு கட்டுபவர் (developer), வீடு வாங்கியவருக்கு உறுதிப்பத்திரம் வழங்காமல் இருப்பதற்கு முக்கிய காரணம் உள்ளூராட்சி சபையின்/நகர அபிவிருத்தி அதிகார சபையின் இணக்க சான்றிதழைப் (COC) பெறாமல் இருப்பதேயாகும். COC பெற முடியாமைக்கு காரணம் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் உள்ளூராட்சி சபை / நகர அபிவிருத்தி அதிகார சபை வழங்கிய அனுமதிக்கு ஏற்ப கட்டப்படாமையே ஆகும்.**

மேலும் இப்படியான தொடர்மாடி கட்டடங்களிலுள்ள வீடுகளைக் கொள்வனவு செய்தவர்களுக்கு இற்றை வரை விற்பனை உடன்படிக்கை மாத்திரமே உண்டு. அவர்களுக்கு உறுதிப்பத்திரம் இன்னும் கொடுக்கப்படவில்லை.

மேற்கூறப்பட்டுள்ள அனுமதிபெறா நடவடிக்கைகளால் உள்ளூராட்சி சபையினால் தொடர்மாடிக் கட்டடத்திற்கான இசைவுச் சான்றிதழ் வழங்க இயலாதுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் மேற்படி ஆதனங்கள் காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட இயலாதென்பதால் ஆதனத்திற்காக உறுதிப்பத்திரத்தை வழங்காது வீடு கட்டுபவர் **(developer)** தட்டிக்கழித்து வருகின்றார்.

இவ்விதமாக விற்பனை உடன்படிக்கை மூலமாக கொள்வனவு செய்யப்பட்ட ஒரு வீட்டினை அடகு வைக்கவோ விற்பனை செய்யவோ மாத்திரமின்றித் தமது பிள்ளைகளுக்குக் கூட சாட்டுதல் செய்ய இயலாது. வஞ்சகம் நிறைந்த ஆதன அபிவிருத்தியாளர்களினால் **(developers)** ஏமாற்றப்பட்டு ஆதனங்களைக் கொள்வனவு செய்த நூற்றுக்கணக்கானவர்கள் தமது உரிமைகளைப் பெற்றுத்தருமாறு கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையிடம் முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

பொதுவாக கூறுவதானால் கொழும்பில் உள்ள பெரும்பான்மையான 236 கூட்டுரிமை தொடர்மாடி வீடுகளில் சொந்த வீடுகளை வைத்திருப்பவர்கள், தங்கள் சொத்துக்களுக்கான உறுதிப்பத்திரங்களை அவர்கள் கொண்டிருக்கவில்லை என 2015 ஆம் ஆண்டுப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இந்த தொடர்மாடிக் கட்டடங்களில் கிட்டத்தட்ட 6,000 தனி வீடுகள் உள்ளன. பல்வேறு காரணங்களுக்காக இவ்வீடுகளுக்கு கூட்டுரிமை முகாமைத்துவ அதிகார சபையால் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. கூட்டுரிமை முகாமைத்துவ அதிகார சபையின் சான்றிதழ் பெறாத காரணத்தால் வீட்டைக்கட்டியவர்கள் **(developers)** வீட்டை வாங்கியவர்களுக்கு வீட்டுக்கான பிரகடன உறுதியை **(deed of declaration)** காணிப்பதிவுக் காரியாலயத்தில் பதிவு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள்.

இப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபை 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆதனமொன்று நிர்மாணிக்கப்பட்டபின் காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யப்படாமை தொடர்பில் அத்தகைய மோசடிப்பேர்வழிகளான ஆதன அபிவிருத்தியாளர்களுக்கு **(developers)** எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

**தொடர்மாடிக் கட்டடத்தில் உங்கள் வீட்டிற்கான உறுதிப்பத்திரம் கிடைக்காதிருப்பின் அது பற்றி கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு முறையிடலாம்.**

அத்துடன் ஒரு சில ஆதன அபிவிருத்தியாளர்களால் **(developers)** புரியப்பட்ட இத்தகைய அத்து மீறிய நிர்மாணிப்புக்களை அகற்றி உள்ளூராட்சி சபையின் இசைவுச் சான்றிதழைப் பெறும் பொருட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபை பல நடவடிக்கை எடுத்துள்ளது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

தொடர்மாடிக்குடியிருப்பு வாங்கும் முன் பின்வருவனவற்றையும் கவனத்தில் கொள்வது சிறந்தாகும்.

உதாரணமாக நாம் தொடர்மாடிக்குடியிருப்பு வீடு ஒன்றை வாங்கும் முன்பு, அந்தக் குடியிருப்பில் எதை அனுமதிப்பார்கள் எதை அனுமதிக்கமாட்டார்கள் என அறிந்து கொண்டு வாங்க முடிவு எடுப்பது நல்லது. சிலர் வளர்ப்புப்பிராணிகளை.வளர்க்கலாம். அதாவது நாய் போன்ற பிராணிகளை சில குடியிருப்புக்களில் அனுமதிப்பதில்லை. சில தொடர்மாடிக் குடியிருப்புக்கள் சில வகையான மிருகங்களை மட்டும்தான் அனுமதிப்பார்கள். இவற்றை எல்லாம் நடைமுறையில் வைத்திருப்பது முகாமைத்துவ கழகத்தின் கையில்தான் உள்ளது.

இப்படியான நிபந்தனைகள் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வேறுபட்டதாக இருக்கும். ஆகவே நாம் இவ்வகைக் குடியிருப்புக்களை வாங்கும் முன்பு அவற்றைப்பற்றி அறிந்துகொள்வது நல்லது. அத்துடன் நீங்கள் வாங்கும் குடியிருப்பை நடத்தும் முகாமைத்துவ கழகத்தின் வரலாறு, அவர்களின் நடவடிக்கைகள் என்பவற்றையும் அறிதல் நல்லது. நல்ல முகாமைத்துவ கழகமாக இல்லாவிட்டால் நாம் தேவை இல்லாத பிரச்சினையை விலைக்கு வாங்குவதாக அமைந்துவிடும். நீங்கள் செலுத்தும் பராமரிப்புக் கட்டணத்தை வைத்து அந்த கட்டடத்திற்குத் தேவையானவற்றை நடைமுறைப்படுத்துவது இவர்களாகும்.

அடுத்ததாக தற்போதைய நிலையில், அநேகமான கட்டட நிர்மாண நிறுவனங்கள் எல்லோரும் அந்த கட்டடங்களில், வீடு வாங்குவதை விரும்ப வைக்கும் காரணத்திற்காக புதுப்புது பொதுவான பொழுதுபோக்கு தொகுதிகளைக் கட்டுவார்கள். உதாரணமாக நீச்சல் தடாகம் போன்ற பலவகையான வசதிகளைச் செய்வார்கள். ஆனால் ஒவ்வொரு புதிய வசதியும் செய்ய, உங்களது மாதாந்த பராமரிப்புக் கட்டணமும் கூடும்.

(தொடரும்...)

# 7 மாதங்களுக்குள் 4390 வழக்குகளுக்குத் தீர்ப்பு 2901 வழக்குகள் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றம்

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டின் கடந்த 7 மாதங்களுக்குள் 4390 குற்றச் செயல்களுடன் தொடர்புடைய வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை 2901 குற்றச் சாட்டுக்கள் தொடர்பான வழக்குகள் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் 242 பேர் இதுவரையில் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (இ-7)

## மிலேனியம் சவால் உடன்படிக்கை மூலம்

# அமெரிக்கக் கட்டுப்பாட்டின் கீழ் இலங்கை நிலங்கள் வராது

## தூதுவர் அலைனா விளக்கம்



**(கொழும்பு)**

**இலங்கையுடனான உத்தேச மிலேனியம் சவால் ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கீழ் அமெரிக்கா எந்தவொரு நிலத்தையும் அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் போவதில்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் விளக்கமளித்தார்.**

இலங்கை - அமெரிக்க வர்த்தக கவுன்சிலின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்ட அமெரிக்கத் தூதுவர், சகலருக்குமான பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு உதவுவதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்ய அமெரிக்கா விரும்புகிறது.

பலம் மிக்கதும், சகல தரப்பையும் அரவணைப்பதுமான பொருளாதார வளர்ச்சி இலங்கையின் சுயாதிபத்தியத்தை மேம்படுத்தும். இது தொடர்பானதே மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அபிவிருத்தி உடன்படிக்கையாகும் என்றும் கூறினார்.


இந்தக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்கவும் கலந்து கொண்டார்.

அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சகல வீதிகளினதும் மேற்பார்வையும் கட்டுப்பாடும் இலங்கையிடமே இருக்கும். அமெரிக்கா எந்தவொரு நிலத்தையும் சொந்தமாக்கப் போவதில்லை. கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவோ, நிர்வகிக்கவோ போவதில்லை. இந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கையில் நிலங்களின் கட்டுப்பாட்டை அமெரிக்கா எடுக்குமென கவலை வெளியிடப்படுகிறது.

இலங்கை அரசாங்கமும் அமெரிக்காவும் தனியார்துறையுடனும் சிவில் சமூகத்துடனும் சேர்ந்து கூட்டாக வகுத்திருக்கும் உத்தேச மிலேனியம் சவால் ஒத்துழைப்பு உடன்படிக்கை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு 48 கோடி அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதை நோக்காகக் கொண்டதாகும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# குடியிருப்புப் பகுதியிலிருந்து திடீரென ஐந்து குடும்பங்கள் வெளியேற்றம்

## நாவலப்பிட்டியில் பரபரப்பு





(நாவலபிட்டி)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெட்டபுலா தெரிசாகல உனுகல் ஓயா பகுதியில் நிலம் தாழிறங்கியதன் காரணமாக ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் வெளியேற்றப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிக்கு அருகாமையில் நிலம் தாழிறங்குவதை அவதானித்த பிரதேச மக்கள் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து கொத்மலை பிரதேச செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் இவ்வாறு வெளியேற்றப்பட்டதாக கொத்மலைப் பிரதேச செயலாளர் சுரங்கி பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை வெளியேற்றப்பட்ட மக்கள் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த மக்கள் கொத்மலை ஓயா அமைக்கப்பட்ட காலப்பகுதியில் வெளியேற்றப்பட்டு குறித்த பகுதியில் குடியேற்றப்பட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (இ-7)

# அம்பாறையில் கைக்குண்டுகள் மீட்பு



(சவளக்கடை)

அம்பாறை சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிட்டங்கி நாவிதன்வெளி வாவிக்கு அருகாமையில் மீட்கப்பட்ட கைக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் புதன் கிழமை கிடைக்கப்பெற்ற விசேட தகவல் ஒன்றையடுத்து அப் பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பொலித்தீன் ஒன்றில் சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட கைக்குண்டுகளை மீட்டனர்.

குறித்த கைக்குண்டுகள் யாவும் ஆற்றங் கரையோரம் பொலித்தீன் பை ஒன்றினுள் இருந்து மீட்கப்பட்டதுடன் இக் குண்டுகளை சிறுவர்கள் கைக்குண்டுகள் என அறியாமல் எடுத்து விளையாடியுள்ளனர்.

இதனை தொடர்ந்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொதுமக்கள் இணைந்து சவளக்கடை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கியதுடன் இராணுவத் தினரும் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் படையினரும் வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (இ-7)

# உழவியந்திரம் தடம்புரண்டதில் பண்ணையில் பணிபுரிந்தவர் பலி!



(அக்கரப்பத்தனை)

உழவியந்திரம் தடம்புரண்டதில் போபத்தலாவ மெனிக்பாலம் மரக்கறிச் செய்கை பண்ணையில் பணிபுரிந்து வந்த நபர் உயிரிழந்ததாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

போபத்தலாவ மெனிக்பாலம் மரக்கறிப் பண்ணையிலிருந்து 3 ஆம் பிரிவு பகுதிக்கு பொருட்களை ஏற்றிச் சென்ற போதே குறித்த உழவியந்திரம் பாதையை விட்டு விலகி தடம்புரண்டதில் சாரதியும் பண்ணை பணியாளரும் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

அதன் பிறகு அக்கரப்பத்தனை வைத்தியசாலைக்கு குறித்த இருவரையும் கொண்டு செல்லும் போது பணியாளர் உயிரிழந்ததாகவும் பலத்த காயங்களுக்குள்ளான உழவியந்திரத்தின் சாரதி அக்கரப்பத்தனை வைத்தியசாலையில் இருந்து நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் 35 வயது எஸ்.பொடிமாத்தியா என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 | 300 |
| தக்காளி | 100 | 100 | 90 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 110 | 120 |
| கோவா | 80 | 80 | 55 | 80 |
| கரட் | 100 | 140 | 120 | 160 |
| பூசணி | 60 | 60 | 50 | 80 |
| புடோல் | 50 | 60 | 70 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100-160 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 150 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 60 | 100 |
| பயற்றங்காய் | 150 | 180 | 150 | 200 |
| லீக்ஸ் | 100 | 90 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 180 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 30-35 | 60 |
| கீரை -1பிடி | 50 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 250 | 240 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 20-30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 180 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 240 | 160 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 40 | 120 | 50 |

### தேவையில்லாமல் உரசிப்பார்த்து

# பெருந்தோட்ட தமிழ் இளைஞர்களை ஆயுதம் தூக்க வைக்க வேண்டாம்

## இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை


(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி பொலிஸார் பெருந்தோட்ட தமிழ் இளைஞர்களுடன் தேவையில் லாமல் உரசிப்பார்த்து அவர்களையும் ஆயுதம் தூக்க வைக்கக்கூடாது என இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

பெருந்தோட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சிலர் இனவாத ரீதியில் செயற்படுகின்றனர். எல்ல விளையாட்டு மைதானத்தில் எமது இளைஞர்கள் விளையாட எல்ல பொலிஸ் பொறுப்பதிகாரி தடை விதித்தார். இந்த மைதானம் வெள்ளைக்காரர் காலம் முதல் உள்ளது. 5 தலைமுறைகளாக பெருந்தோட்ட மக்கள் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர். இப்போது அது தனியாருக்கு சொந்தமானதெனக்கூறி பொலிஸ் பொறுப்பதிகாரி அதில் எமது இளைஞர்கள் விளையாட தடையுத்தரவு பெற்றுள்ளார்.

தோட்டக் கம்பனி முதலாளிமார்களுடன் சேர்ந்து விருந்துகளில் பங்கேற்கும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளே இவ்வாறான இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கி



போராடினார்கள். முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதம் தூக்கி விட்டார்கள். பெருந்தோட்ட இளைஞர்களும் ஆயுதம் தூக்கிப் போராட வேண்டுமென விரும்புகின்றீர்களா? என்று கேட்கின்றேன். எல்ல பொலிஸார் அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்திக்கொண்டு எமது இளைஞர்களுடன் உரசிப்பார்க்க வேண்டாமென எச்சரிக்கின்றேன் என்றார். (இ-7)

# குர்ஆனிலுள்ள சில வசனங்களுக்கு விளக்கம் தாருங்கள்- ஓமல்பேதேரர்

(கொழும்பு)


இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனில் இருப்பதாகக் கூறப்படும் வன்முறையைத் தூண்டும் விதத்தில் காணப்படும் விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு ஓமல்பே சோபித தேரர் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் இடம்பெற்ற சமாதானம், ஐக்கியம் மற்றும் நல்லிணத்திற்கான தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் குர்ஆனை விமர் சிக்கவில்லை. இருப்பினும், என்னிடம் பலரும் கேள்வி எழுப்புகின்றனர். இதனால், அல் குர்ஆனில் இடம்பெற்றுள்ள இந்த விடயங்கள் தொடர்பில் விடையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அல்குர்ஆனில் இருப்பதாக நான் கூறும் கருத்து தவறாக இருந்தால் அதனை சரி செய்யுமாறும் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் கேட்டுக் கொண்டார்.

அகில இலங்கை ஜம்இய



யத்துல் உலமா சபையின் தலைவர் அஸ்செய்க் ரிஸ்வி முப்தி தனதுரையில் சோபித தேரரின் கருத்துக்கு இவ்வாறு பதிலளித்தார். முஸ்லிம் சமூகமும், முஸ்லிம் உலமாக்களும் இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியுள்ளனர். தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ள அல்குர்ஆனின் வசனங்கள் தொடர்பில் சிங்கள மொழியில் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. முஸ்லிம் சமூகம் அந்தப் புத்தகங்களை வாங்கி மாற்று மதச்சகோதரர்களுக்கு வழங்குவதன் ஊடாக இந்த தவறான கருத்தை சரி செய்யலாம் எனக் கூறினார். (இ)

# இந்திய மீனவர்களை பார்வையிட்ட உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள்

(நெளுக்குளம்)

மன்னார் கடற்பரப்பில் எல்லை மீறி வந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைகக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஏழு பேரையும் உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகள் சிலர் நேற்றுக் காலை சிறைக்குச் சென்று சந்தித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் ஏழுபேரையும் சந்தித்து அவர்களின் தற்போதைய நிலைமைகள் மற்றும் விடுதலைக்கு எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியதாக அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தனர். வவுனியாவில் உள்ளூராட்சி மன்றங்களில் 25 பிரதிநிதிகள் உள்ள நிலையில் அவர்களின் சார்பில் 3 பேர் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட தாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை அண்மையில் குறித்த இந்திய மீனவர்களை வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் சென்று சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1793

### தர்சன்

இரவா பகலா குளிரா வெயிலா என்னை ஒன்றும் செய்யாதடிஉச்சி வெயில் 12 மணிக்கு நடு ரோட்டில நின்னு பாரு வெயில் என்னா செய்யுதுன்னு தெரியும்



### ஆகாஷ்

நல்ல செயல்கள்

நட- அதிர்வின்றி, பழகு- நாகரிகமாக, பேசு- பணிவாக, உண்ணு- அளவாக, சுவாசி- ஆழமாக, உடுத்து- அழகாக, செயற்படு- அச்சமின்றி, உழை- உண்மையாக, தூங்கு-அமைதியாக, சிந்தி- சுயமாக, நம்பு- சரியாக, திட்டமிடு- முன்னதாக, ஈட்டு- நேர்மையாக, சேமி- சிறிதாவது, செலவிடு- யோசித்து, நேசி- பேதம் கடந்து, படி- முடிவின்றி, மரணி- பயமின்றி

### சௌமியா

ஒரு பெண் என்றைக்குமே அவளுக்காக வாழமாட்டாள், ஒரு ஆண் என்றைக்குமே அவனுக்காக சம்பாதிக்கமாட்டான்



### சுகிர்தா

டேய் நாம ஐந்து வருசமா லவ் பண்றோம் எப்ப கல்யாணம்னு கேட்கமாட்டியா? சரி சொல்லு உனக்கு எப்போ கல்யாணம்?



### அக்ஷயன்

ஒரே நிமிடங்களில் சிவப்பழகு சோப்பினால் அல்ல அப்பினால்



### யசோதா

கணவர்: கூட்டு பிரமாதம், அடடே பொறியல் அற்புதம், சாம்பார் சுவையோ சுவை.
மனைவி: போதும் தற்பெருமையை நிறுத்திட்டு சாப்பிடுங்க



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோத்தாவின் அமெரிக்க குடியுரிமை ரத்தாகியிருந்தால் ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த தயங்குவது ஏன்?

## துஷார இந்துநில் கேள்வி





(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்கக் குடியுரிமை உண்மையில் இரத்துச் செய்யப்பட்டிருக்குமானால் அதனை ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதியாகுவதற்காக அமெரிக்கக் குடியுரிமையை இழக்க முடியாது என்று அவர் எண்ணுவாராக இருந்தால் வேறொரு ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

உண்மையாக கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்கப் பிராஜாவுரிமை இரத்தாகி இருந்தால் ஏன் அதனை ஊடகங்களில் பகிரங்கமாக அறிவிக்க மறுக்கிறார். சகல விடயங்களுக்காகவும் ஊடகங்களை நாடும் இவர்கள் எதற்காக இந்த விடயத்தை மாத்திரம் ஊடகங்களுக்கு அறிவிக்க மறுக்கிறார்கள். அமெரிக்கப் பிரஜாவுரிமையை நீக்கிக் கொண்டு ஜனாதிபதித்தேர்தலில் கோத்தபாய களமிறங்க வேண்டும். அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. நிச்சயமாக நாங்கள் அவரைத் தோற்கடிப்போம்.

இலங்கையின் ஜனாதிபதியாகுவதற்காக அமெரிக்காவின் குடியுரிமையை இழக்க முடியாது என்று அவர் எண்ணுவாராக இருந்தால், வேறொரு ராஜபக்ஷவுக்கு வாய்ப்பை வழங்க வேண்டும். தேசிய வேட்பாளர் ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

எனவே அவரும் வெளிநாட்டு வேட்பாளர் வேண்டாம் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

அவர்கள் நேரடியாக கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான கருத்தையே வெளியிடுகின்றனர் என மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# 50 ரூபா கொடுப்பனவுக்கான நிதியைப் பெற்றுத்தருவதாக பிரதமர் உறுதி - கிரியெல்ல

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களுக்கான 50 ரூபா கொடுப்பனவுக்கான அனுமதியை அமைச்சரவை அங்கீகரித்தது. பிரதமர் தலையிட்டு அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித்தருவதாக உறுதியளித்திருக்கின்றார் என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன உரையாற்றுகையில்,

தோட்டத்தொழிலாளர்களுக்கான 50 ரூபா கொடுப்பனவு விடயத்தில் அரசு அம்மக்களை ஏமாற்றியுள்ளது. அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து இதனைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போயுள்ளது. அதனால் கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து அமைச்சர் திகாம்பரம் வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தார்.

இதற்குச் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல பதிலளிக்கையில், தோட்டத்தொழிலாளர்களுக்கான 50 ரூபா கொடுப்பனவை வழங்க கடந்த அமைச்சரவையில் இணக்கப்பாடு எட்டப்பட்டது. பிரதமர் தலையிட்டு இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித்தருவதாக தெரிவித்திருக்கின்றார். எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கான 50 ரூபா கொடுப்பனவிலிருந்த பிரச்சினை இதன்மூலம் தீர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (இ-7)

# ஷக்திகவின் விடுதலையை வலியுறுத்தி சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்புங்கள்

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

(கொழும்பு)

எழுத்தாளர் ஷக்திக சத்குமாரவை நிபந்தனைகள் எதுவுமின்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவிற்கு ஒவ்வொருவரும் கடிதமொன்றை அனுப்பிவைக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்திருப்பதுடன், அதற்குரிய மாதிரிக் கடிதத்தையும் வெளியிட்டது.

விருது வென்ற எழுத்தாளர் ஷக்திக சத்குமார, பௌத்த ஆராமை வாழ்வு மற்றும் அங்கு இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தை மையப்படுத்தி எழுதி தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட சிறுகதை ஒன்றைக் காரணம் காட்டி கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் அதற்காக தற்போது அவர் 10 வருடகால சிறைத் தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

ஷக்திகவின் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவர் நிபந்தனைகளின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, ஷக்திகவை விடுதலை செய்யுமாறு கோரி சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டது. (இ-7)

# களனி ரஜமகா விகாராதிபதி குறித்த ரஞ்சனின் கருத்தால் ரணில் வருத்தம்



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவால் களனி ரஜமகா விகாராதிபதி தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட காணொலி குறித்து பலரும் தனது அவதானத்துக்குக் கொண்டு வந்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் தெரிவித்தார்.

களனி ரஜமகா விகாரையின் செயற்குழுத் தலைவர் என்ற வகையில் குறித்த காணொலியை தான் நிராகரிப்பதாகவும் பிரதமர் தனது விசேட அறிவித்தலின் மூலம் குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சரின் இச்செயற்பாடுகள் தொடர்பில் தான் நியமித்த குழுவின் கவனத்துக்கு இந்தக் காணொலியை வழங்குவதாகவும் பிரதமர் தனது அறிவித்தலில் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# தேர்தலை மையப்படுத்தி வாசு-பிரபா புரிந்துணர்வு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணிக்கும் பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் காங்கிரசிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளதுடன், புரிந்துணர்வு சம்பந்தப்பட்ட ஆவணங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து திருமறைக் கலாமன்றத்தில் நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பழம்பெரும் தென்மோடி வடிவமான 'தேவசகாயம் பிள்ளை' நாட்டுக்கூத்து மேடையேற்றமும், 'யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபின் இருப்பும், மேம்பாடும்' என்னும் தலைப்பிலான கருத்தமர்வும் நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இதில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கருத்தமர்வு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறும். மாலை 6.30 மணிக்கு "தேவசகாயம்பிள்ளை" நாட்டுக்கூத்து திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறையை சேர்ந்த ஞா.வி.பிலேந்திரன் அடிகள் கலந்து கொள்வார்.


இதன்போது கூத்துக்கலையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த அண்ணாவியார்களான வில்லியம் கஸ்பார் (மண்டைதீவு), இராஜேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை (பாஷையூர்), யாக்கோபு தேவதாஸ் (வெற்றிலைக்கேணி), அண்ணாவியார் அதிரியான் யேசுதாசன் (மெலிஞ்சிமுனை), பாவிலுப்பிள்ளை வேதநாயகம் (பருத்தித்துறை) ஆகியோர் 'கூத்துக்கலை மாமணி' என்னும் விருது வழங்கி திருமறைக் கலாமன்றத்தால் கௌரவிக்கப்படுவர். (5)


# முஸ்லிம் அல்லாதவர்களை அழிப்போம்

## ஐ.எஸ்.பயங்கரவாதிகள் எச்சரிக்கை

(நியூயோர்க்)

முஸ்லிம் அல்லாதவர்களை அழிப்போம் என ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நியூயோர்க் மற்றும் லண்டனின் சில பகுதிகளில் தாக்குதல் நடத்துவது போன்றும், இஸ்லாமியர் அல்லாதவர்களை கொல்வோம் எனவும் குறிப்பிட்டு வெளியிட்டுள்ள ஒளிப்படங்களிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




பயங்கரவாதிகளைக் கண்காணிக்கும் ஆராய்ச்சி நிறுவனமான மெம்ரி ஜே.டி.டி.எம். மற்றும் சில சர்வதேச ஊடகங்கள் சிலவற்றில் இந்த ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன.

'நீங்கள் நாங்கள் தோற்று விட்டதாக நினைத்திருக்கலாம். இஸ்லாமிய ஆதரவாளர்கள் சரணடைந்து விட்டதாக நினைத்திருக்கலாம். ஆனால் கூடிய விரைவில் லண்டன் மற்றும் பல இடங்களில் தாக்குதல் நடக்கும்' என இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள ஒளிப்படம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அமெரிக்காவின் தலைநகர் நியூயோர்க்கில் இருக்கும் மஞ்சள் நிற வாடகை வாகனத்திற்கு அருகே ஒரு தற்கொலைத்தாரி குண்டுடன் நிற்கிறான். அதில் எங்கள் இரத்தம் வெற்றியடையும், ஒரு சிறந்த அழிவை கொடுப்போம், இஸ்லாமியர் அல்லாதவர்களை அழிப்போம்' என மற்றுமொரு ஒளிப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள காரணமாக லண்டன் உள்ளிட்ட சில முக்கிய பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்ஸா கொல்லப்பட்டதாக அமெரிக்க உளவுத்துறை தகவல்



ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்ஸா பின்லேடன் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அரசின் உளவுத்துறை அறிவித்துள்ளது. அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் தலைவனான ஒசாமா பின்லேடன் கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் பாகிஸ்தானில் உள்ள அபோடாபாத் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டதாக அமெரிக்கா அறிவித்தது.

இதையடுத்து தனது தந்தையைக் கொன்றதற்காக அமெரிக்காவையும் அமெரிக்கர்களையும் பழிக்குப்பழி வாங்குவேன் என ஒசாமா பின்லேடனின் மகனான ஹம்ஸா பின்லேடன் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில், ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்ஸா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அரசின் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஆப்கானில் குண்டுவெடிப்பு ஐ.நா.பொதுச்செயலர் கண்டனம்





(நியூயோர்க்)

ஆப்கானிஸ்தானில் பேருந்து மீது பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் ஹெராத் - காந்தகார் பிரதான வீதியில் தற்கொலைப் படையினர் நேற்று முன்தினம் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இதில் அந்த வழியாகச் சென்ற பேருந்தில் இருந்த குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 34 பேர் பலியானார்கள். 17 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் பேருந்தின் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஐ.நா.சபை பொது செயலாளர் அண்டோனியா குட்டரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் மீதான இத்தகைய தாக்குதல் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுவதாக அமைந்துள்ளது.

இதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

## மரத்தில் கார்மோதி கோரவிபத்து ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 7 பேர் பலி!

(புனே)

புனே-பெங்களூர் பிரதான வீதியில் உள்ள மரத்தில் கார் மோதி விபத்துக்குள்ளானதில் குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.



கர்நாடக மாநிலம் தாரிவாட் பகுதியில் இருந்து மும்பை நோக்கி சென்ற காரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் உட்பட மொத்தம் 8 பேர் பயணம் செய்தனர். கார் புனே-பெங்களூர் தேசிய பிரதான வீதியில் காந்திநகர் என்ற பகுதியை கடந்த வேளை திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் காரில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், காரின் சாரதி படுகாயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார்.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து படுகாயமடைந்த கார் சாரதியை மீட்டுச் சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேலும், உயிரிழந்தவர்களின் உடல்களை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் கார் அதிவேகமாகச் சென்றதே விபத்துக்குக் காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

## ஐ.எஸ்ஸிற்கு எதிரான தாக்குதலில் கேரள இளைஞன் உயிரிழப்பு

(கேரளா)

ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீது அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட ட்ரோன் தாக்குதலில், கேரள இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த தகவலை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் கேரளாவைச் சேர்ந்த முகமது முஹாசின் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு பொறியியல் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு டுபாய் சென்ற முஹாசின். அங்கிருந்து, ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்து ஆப்கானிஸ்தான் சென்றுள்ளார்.

அத்துடன் கேரளாவில் கண்ணூர் மாவட்டத்தில் இருந்து 39 பேர், ஆப்கான் ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்துள்ளதாகவும் அதில் 15 பேர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகவும் புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

காசர் கோடு, கோழிக்கோடு, மலப்புரம், பாலக்காடு, எர்ணாகுளம், திரிச்சூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த பலர் ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து அரேபிய நாடுகளுக்கு வேலைக்குச் செல்பவர்களை மூளைச் சலவை செய்து அங்கிருந்து ஆப்கானுக்கு அழைத்துச் செல்கின்றனர் என்றும் தென்னிந்தியாவைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் உட்பட 59 பேர் இன்னும் ஆப்கானிஸ்தானின் ஐ.எஸ். அமைப்பில் இருப்பதாகவும் புலனாய்வு அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ். மற்றும் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராக அந்நாட்டுப் படையுடன் அமெரிக்க இராணுவம் தாக்குதலில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

கனவு என்பது தூக்கத்தில் காண்பதல்ல. உங்களை தூங்க விடாமல் செய்வது.

-அப்துல் கலாம்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## உயிர்த்தஞாயிறு தாக்குதலை நடத்தியவர்கள் யார்?

இலங்கை தனித்து பௌத்த சிங்கள நாடு என்ற மமதைத்தனம் நாட்டை படுபாதாளத்தில் தள்ளி விட்டது.

நாட்டின் வர்த்தக முயற்சிகள் தள்ளாடிக் கொண்டிருக்கின்ற நிலையில், கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் இலங்கையின் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அதிலும் குறிப்பாக சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியானது பல்வேறு துறைகளிலும் பாதிப்பை விளைவித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, உயிர்த்தஞாயிறு தினத்தில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதத்துக்கும் தொடர்பில்லை என்பதாக இப்போது கதை விடப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலையடுத்து குறித்த குண்டுத்தாக்குதலை, ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதமே நடத்தியதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பில் ஆதாரங்கள் வெளியிடப்பட்டன.

தவிர, ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கை மீது தாக்குதல் நடத்தலாமென இந்தியாவின் புலனாய்வுத்துறை எச்சரிக்கை செய்த தான தகவல்களும் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கை மீது தாக்குதல் நடத்துவதை விட்டு விடுமாறு இந்த நாட்டின் ஜனாதிபதி பௌவியமான வேண்டுதல் ஒன்றை முன்வைத்திருந்தார்.

இவையெல்லாம் நடந்துமுடிந்த நிலையில் இப்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என படைத்தரப்பு அதிகாரிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாகக் கூறிவருகின்றனர்.

ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்தஞாயிறு தினத்தில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலை, ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளே நடத்தினர் என முதலில் தெரிவித்தவர்கள் இப்போது அதிரடியாக ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதத்துக்கும் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கும் தொடர்பில்லை எனக் கூறிவருகின்றனர்.

இவ்வாறு கூறுவதன் பின்னணியில் இருக்கக்கூடிய காரணங்கள் என்ன என்பது ஆய்வுக்குரிய விடயம்.

இவற்றுக்கு மேலாக ஒட்டுமொத்தமாக அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்த முஸ்லிம் எம்.பிக்கள் மீண்டும் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து அமைச்சர் ரிசாத் பதியுதீன் பதவி விலக வேண்டும் எனக் கேட்டிருந்த பௌத்த பிக்குகள், இப்போது வாய்பொத்தி மௌனமாக இருக்கின்றனரெனில்,

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதம் தாக்குதலை நடத்தவில்லை என்று கூறுவதற்கும் பௌத்த பிக்குகளின் மௌனத்துக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உண்டா என்று ஆராய்வதும் அவசியமாகிறது.

## தேர்த் திருவிழாவும் ஆடிப்பூர தீர்த்தமும்

காரைநகர் திண்ணைபுரம் சிவன் கோவில் ஈழத்து சிதம்பரம் தேவஸ்தான வருடாந்த தேவி மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று தேரோட்டம் இடம்பெறும். நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆடிப்பூர தீர்த்தோற்சவம் இடம்பெறும்.(5)

## தேர்த் திருவிழாவும் திருமுறை அரங்கும்

சுன்னாகம் கதிரமலை சிவன் சுவர்ணாம்பிகை ஆலய தேர்த்திருவிழா இன்று மாலை 6 மணியளவில் இடம்பெறும்.

அம்மன் தேரில் ஆரோகணித்த வேளை கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் திருமுறை அரங்கு இடம்பெறும். (5)

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்

## கைதடிச்சந்திப்பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

கைதடிச் சந்திப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதில் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 21வயதான சயந்தன் என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-03-30)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் முழுமையான அனுசரணையுடன் யாழ் பாலர்கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளுக்கிடையிலான 53 ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பாலர் கல்விக் கழகத் தலைவர் , யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் கலைஞானச்சுடர் எஸ்.பி.காசிநாதன் (ஜே.பி.) தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் லயன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், கௌரவ விருந்தினராக யூனியன் கல்லூரி முகாமையாளர் சா.மு. ஹென்ஸ்மன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் செப்டம்பரில் அறிவிக்கப்படும் -அமரவீர

சுதந்திர கட்சியின் தரப்பில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி அறிவிக்கப்படுவார் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொது செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள சுதந்திரக்கட்சி சம்மேளனத்தில் அறிவிக்க தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார். (ம-3)

# மகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய இலங்கையர் இத்தாலியில் தற்கொலைக்கு முயற்சி

## இருவரும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

(ரோம்)

இத்தாலியின் பெதுவா பகுதியில் இலங்கையர் ஒருவர் தனது மகளை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார்.

56 வயதான இலங்கையர் ஒருவரே இவ்வாறு தனது 26 வயது மகளை சுட்டு விட்டு பின்னர் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்ததாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மகளையும், குறித்த நபரையும் இத்தாலி பொலிஸார் வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

தந்தையும், மகளும் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மீள் சுழற்சியும் சுகாதாரமும்

இங்கு இருப்பது எல்லாமே மீண்டும் திரும்பத் திரும்பச் சுழற்றப்பட்டு வருவதுதான். இந்தப்பூமி, மலைகள், நீர், காற்று எல்லாம் 20 கோடி ஆண்டுகள் பழைமையானவை. எத்தனையோ கோடி மக்கள் இதே காற்றைச் சுவாசித்திருக்கின்றனர். உனது உடலிலுள்ள எல்லாத் துகள்களும் பழையவை. நீ சுழற்சியினால் புதுப்பிக்கப்பட்டுள்ளாய். உனது எண்ணங்களும் உணர்ச்சிகளும் சுழற்சியில் சுழன்று வந்துள்ளது.

நீ மீள்சுழற்சியால் வந்துள்ளவன். இங்கே எல்லாமே சுழற்சியில் சுழன்று வருபவைதான். மெய்யுணர்வு சுழற்சியில் சுழன்று வந்த அதே பழைய மெய்யுணர்வு தான். இங்கிருப்பவை எல்லாம் மீள் சுழற்சியால் உள்ள பொருட்கள் தான் என்பதை நினைவில் கொண்டு பதற்றமின்றி ஓய்வாயிரு. எல்லாம் எங்கிருந்து வந்தனவோ அங்கேயே போய்ச்சேருகின்றன. மீள்சுழற்சி தூய்மையையும் சுகாதாரத்தையும் கொண்டு வருகிறது. ஞானம் மனதை மீண்டும் சுழற்சியால் புதுப்பிக்கிறது.

தாரா: மீள்சுழற்சி எல்லாவற்றையும் புதிதாக்குகிறது. ஆகையால் ஞானத்தால் மீள்சுழற்சிக்குட்பட்ட மனமும் எல்லாவற்றையும் புத்தம் புதிதாகக் காண்கிறது.

ஸ்ரீஸ்ரீ: ஞானம் எல்லாவற்றையும் புதிதாகவே வைக்கிறது. அதனால் தான் இந்தப் படைப்பை மீள் சுழற்சி செய்ய முடிகின்றது. ஞானத்திலுள்ள மனம் எல்லாவற்றையும் புதிதாகவே காண்கின்றது.

நீ மனதிற்கு ஞானத்தை அளிக்காவிடில் மனம் சீரழிகிறது. ஞானம் மனத்தைத் திரும்பவும் தூய நிலைக்குக் கொண்டுவருகிறது. மீள்சுழற்சி தூய்மையையும் சுகாதாரத்தையும் தருகிறது.

சுகாதாரம் உடல் நலத்தைக் காப்பாற்றுகிறது. ஆனால் மிக அதிகமான சுகாதாரம் உடல் நலத்தைக் கெடுக்கிறது. மிக அதிகமான சுகாதாரச் சூழ்நிலையில் சோம்பலான, ஆயுதமற்ற வீரர்களைப் போன்று உடலிலுள்ள எதிர்ப்புச் சக்தி அமைப்பு ஆகிவிடுகின்றது. சேரிப்பகுதியில் வாழும் மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவதில்லை.

ஏனெனில் மிக நன்றாகப் பயிற்சி பெற்ற ஒரு போர் வீரனைப் போன்று அவர்களது நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. பல சமயம், சுகாதாரத்திற்கு மிக அதிகமாக அக்கறை காட்டுபவர்கள் மோசமான உடல் நலனுடையவர்களாக உள்ளனர். சில சமயங்களில் சுகாதாரமற்ற நிலைமைகள்கூட உடல் நலனைத் தருகின்றன. அது உங்களது நோய் எதிர்ப்புச் சக்தியைப் பயன்படுத்தும் நிலையில் செயற்றிறன் கொண்டதாக திடமுடன் வைக்கிறது. ஞானம் உன் மனதைப் புதிதாக வைக்கிறது.

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

பொதுவாக இறந்தவர் எல்லோரையும் எரிப்பது தான் நியாயம். தகிக்கப்படுவது தேகம். தசரதரைத் தகித்தார் என்று இராமாயணமும் சொல்கிறது. பட்டினத்து சுவாமிகள் தாயாரை எரித்தார் என்ற வரலாறும் இங்கு நினைவு கூர்க.

உச்சி வழியாக ஒளி நெறியில் உயிர் பிரியக்கூடிய யோகிகளை மட்டுமே சமாதி வைக்கவேண்டும்.

இறந்த தன் பிதுர்களுக்கு சொர்க்கம் வரும் பொருட்டு பகீரதன் தவம் செய்து கொண்டுவந்தது பாகீரதி. ஆகையால் காசியில் இறந்தவர்களை எரித்து எலும்பைக் கங்கையில் விடுகிறார்கள். எரிக்காமலும் ஜலசமாதி செய்வதுண்டு. (தொடரும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆடி மாதம் ஏன் சிறந்தது?

ஆடிச் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சில அம்மன் கோயில்களில் அம்மனுக்கு வளைகாப்பு வைபவம் நடைபெறும்.

மேலும் பக்தர்கள் வழங்கும் ஆயிரக்கணக்கான கண்ணாடி வளையல்களை சரம்சரமாகக் கோர்த்து அம்மனுக்கு அலங்காரம் செய்வர்.

மூன்று நாட்கள் கழித்து அந்தக் கண்ணாடி வளையல்களை சுமங்கலிகளுக்குப் பிரசாதமாக வழங்குவர். இதனால் சுமங்கலிகள் குடும்பத்தில் நீடூழி சுகமாக வாழ்வர்.

வளையல்களைப் பிரசாதமாகப் பெறும் கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். மக்கட்செல்வம் இல்லாதவர்களுக்கு நல்ல அழகான குழந்தைச் செல்வம் கிட்டும்.

ஆடி மாதத்தில் பூர நட்சத்திரம் இணையும் நாள் மிகவும் சக்தி கொண்டது. எனவே இந்நாளில் வளைகாப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

ஆடிப்பூர நன்னாளில்தான் ஸ்ரீஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் துளசி வனத்தில் அவதரித்தாள்.

பூமாதேவி அவதரித்த ஆனந்தமான மாதம் ஆடி. ஆடிச் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அம்மன் சந்நிதிமுன் நெய் விளக்கேற்றி வழிபட்டாலும் எலுமிச்சை விளக்கேற்றி வழிபட்டாலும் தோஷங்கள் விலகும். சந்தோஷமான வாழ்வுகிட்டும். (முற்றும்)

# வல்வை றெஜின்போ மென்பந்து போட்டி
## நேதாஜி இளைஞர் விளையாட்டுக்கழகம் சம்பியன்



வல்வை றெயின்போ மென் பந்துப் போட்டியில் நேதாஜி இளை ஞர் விளையாட்டுக் கழகம் சம்பி யன் கிண்ணத்தைக்கைப்பற்றியது.

வல்வை றெயின்போ விளை யாட்டுக் கழகம் 76ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய வல்வைக்குட்பட்ட கழகங்களுக் கிடையிலான 10 ஓவர்கள், 11 நபர்கள் கொண்ட மென்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டியில் நேதாஜி அணியை எதிர்த்து ரேவடி அணி மோதியது.


முதலில் துடுப்பெடுத்தாடிய நேதாஜி அணி 10 ஓவர்கள் நிறை வில் 4 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களை பெற்றது.

அதிகபட்சமாக நேதாஜி அணி சார்பாக தருண் 58 (32), பிரக தீஸ்வரன் 42 (12), தர்சன் 17 (12) ஓட்டங்களைப் பெற்றனர்.

134 எனும் வெற்றியிலக்கை நோக்கி ஆடிய ரேவடி அணி 10 பந்துப்பரிமாற்றத்தின் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 78 ஓட்டங்களை பெற்று இரண்டாம் இடத்தை பெற்றது.

55 ஓட்டங்கள் வித்தியாசத் தில் நேதாஜி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)

# அதிக வீரர்களை ஆட்டமிழக்கச் செய்ததில் இலங்கை வீரர் சங்கக்கார முதலிடம்



ஒருநாள் கிரிக்கெட்டில் ஆசிய அணியைச் சேர்ந்த விக்கெட் கீப்பர்களில் அதிக துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த வர்களின் பட்டியல் வெளியாகி யுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ் தான், வங்கதேசம் போன்ற அணிகள் ஆசியாவைச் சேர்ந்த அணிகளாக சர்வதேச கிரிக் கெட்டில் பங்கேற்று வருகின் றன.

இந்நிலையில் ஒருநாள் கிரிக் கெட்டில் ஆசிய அணிகளைச் சேர்ந்த விக்கெட் கீப்பர்களில் அதிக துடுப்பாட்ட வீரர்களை ஆட்மிழக்கச் செய்தவர்களின் பட்டியலில் இலங்கையின் முன் னாள் வீரர் குமார் சங்கக்காரா முதலிடத்தில் உள்ளார்.

அவர் 482 பேரை விக்கெட் கீப்பராக இருந்து ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

இப்பட்டியலில் இந்தியாவின் டோனி 444 பேரை ஆட்டமிழ க்கச் செய்து இரண்டாமிடத்தில் உள்ளார்.

பட்டியலில் உள்ள முதல் 6 பேரின் விபரம் வருமாறு.

குமார் சங்கக்கார (482) - இலங்கை, டோனி (444) - இந்தியா, மொய்ன் கான் (287) - பாகிஸ்தான், முஸ்பிகுர் ரகு மான் (222) - வங்கதேசம், ரசித் லதீப் (220) - பாகிஸ் தான், ரமேஷ் கலுவவிதரனா (206) - இலங்கை. (க)

# இறுதிப் போட்டியில் நடந்தது என்ன?
## மனம்திறந்தார் இங்கிலாந்து வீரர் ஸ்டோக்ஸ்




உலகக் கோப்பை தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிரான இறுதிப்போட்டியில், 4 ஓவர் த்ரோவ் ரன்களை இரத்து செய்யு மாறு நடுவரிடம் கோரவே இல்லை என இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜுலை 14ஆம் திகதி நடந்த இறுதிப்போட்டியில், நியூசிலாந்து வீச்சாளர் கப்தில் வீசிய பந்து, ஸ்டோ க்ஸ் துடுப்பில் பட்டு பவுண்டரிக்கு சென்றது போட்டியின் திருப்பு முனையாக மாறியது.

முன்னதாக, ஸ்டோக்ஸ் 4 ஓவர் த்ரோவ் ரன்களை ரத்து செய்யு மாறு நடுவரிடம் முறை யிட்ட தாக இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் ஆண்டர்சன் கூறியிருந்தார்.

இந்நிலையில் நேர்காணல் ஒன்றில் தெரிவித்த ஸ்டோக்ஸ், அதையெல்லாம் நான் பார்த் தேன். நான் அப்பபடிச் சொன னேனா? என நானே யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால், இத யத்தில் கை வைத்துக் சொல் கிறேன், நான் நடுவர்களிடம் சென்று அப்படி எதுவும் சொல்ல வில்லை.

நான் நேராக சென்று நியூ சிலாந்து அணித்தலைவர் கேன் வில்லியம்சன் மற்றும் டாம் லாதமிடம் மன்னிப்புக் கேட் டேன் என ஸ்டோக்ஸ் கூறி னார். (க)

# 27 வயதிலேயே ஓய்வு முடிவு
## பயிற்சியாளர் கொடுத்த அதிர்ச்சி



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி யின் வேகப்பந்து வீச்சாளர் முக மது அமீர், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார் என்று தனக்கு முன்பே தெரியும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.


அண்மையில் டெஸ்ட் கிரிக் கெட்டில் இருந்து ஓய்வு பெறுவ தாக, 27 வயதான பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமது அமீர் அறிவித்தார். டெஸ்ட் சம்பியன்ஷிப் ஆடுத்த மாதம் ஆரம்பிக்கும் நிலையில், அமீ ரின் ஓய்வு முடிவு பாகிஸ்தானு க்கு பெரும் பின்னடைவாக அமை ந்துள்ளது.

இந்நிலையில், அமீரின் ஓய்வு முடிவு குறித்து பாகிஸ்தான் பயிற் சியாளர் மிக்கி ஆர்தர் கருத்து தெரிவிக்கையில் 'மற்றவர்க ளுக்கு இது புதியதாக இருக்க லாம். ஆனால், ஓராண்டாக டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து அமீர் சிந்தித்து வந்தார்.

இதுகுறித்து என்னிடமும் பேசி இருக்கிறார். டெஸ்ட் போட்டி களில் விளையாடும் அளவுக்கு, உடல் வலிமை இல்லை என்ப தால் இந்த முடிவை அவர் எடுத்தி ருக்கலாம்.

உடல்நிலையை பொறுத்து எந்தப் போட்டிகளில் ஆட வேண் டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்பது வீரர்களின் தனிப்பட்ட கருத்து. என்னைப் பொறுத்த வரை அவர் மிகச் சிறந்த பந்துவீச் சாளர்' எனத் தெரிவித்துள் ளார். (க)

# உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் கோலி
## பாக்.முன்னாள் பந்து வீச்சாளர் அக்தர் புகழாரம்



பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர், உலக கிரிக்கெட்டில் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரராக இந்திய அணித்தலைவர் விராட் கோலியை தேர்வு செய்துள்ளார்.

அக்தர் டுவிட்டரில் ஒரு கேள்வி-பதில் அமர்வை நடத்தி இந்திய வீரர் கோலி, இங்கி லாந்து வீரர் ஜோ ரூட், அவுஸ்திரே லிய வீரர் ஸ்டீவ் ஸ்மித், நியூ சிலாந்து வீரர் கேன் வில்லியம் சன் மற்றும் பாகிஸ்தான் வீரர் பாபர் ஆசாம் ஆகியோரிடையே உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரரைத் தேர்வு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்த கேள்விக்கு தயக்க மின்றி கோலி என பதிலளித்தார் அக்தர்.

விராட் கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களிலும் மிகச் சிறப்பாக செயற்பட்டு வருபவர் என்பதால் அக்தரின் தேர்வு நியாயமானதாக கருதப்படுகிறது.

இந்திய அணித்தலைவர் ஏற்கனவே 41 ஒருநாள் சர்வதேச சதங்களை அடித்துள்ளார். ஒரு நாள் போட்டியில் அதிக சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் கோலி இரண்டாவது இடத்தில் உள் ளார். முதல் இடத்தில் 49 சதங் களை அடித்த இந்திய ஜாம்ப வான் சச்சின் டெண்டுல்கர் உள் ளார்.

236 ஒருநாள் போட்டிகளில் விளையாடி உள்ள கோலி 11286 ஓட்டங்களுடன், 59.40 சராசரி யாக வைத்து இருக்கிறார். அதே நேரத்தில் அவரது இருபது-20 போட்டி சராசரி 67 போட்டிகளில் 50.28 ஆக 2263 ஓட்டங்கள் அடித்துள்ளார்

விராட், பாரம்பரிய டெஸ்ட கிரிக்கெட் போட்டியிலும் தனது திறமையை நிரூபித்துள்ளார். இதுவரை 77 போட்டிகளில் 53. 76 சராசரியாக 6613 ஓட்டங்கள் எடுத்துள்ளார். டெஸ்டில் 25 சதம் அடித்துள்ள கோலி அவற்றில் 6 இரட்டைச் சதம் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அரியாலை சரஸ்வதியின் துடுப்பாட்டப் போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத் தப்படும் துடுப்பாட்டப் போட்டிகள் நாளை 3 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தின் புதிய மைதானத்தில் பிற்ப கல் 1.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

உள்ளூர் சனசமூக நிலை யங்களுக்கிடையிலான போட் டியில் அரியாலை திருமகள் சன சமூக நிலைய அணியை எதிர் த்து அரியாலை சரஸ்வதி சனச மூக நிலையம், அரியாலை கலைமகள் சனசமூக நிலைய அணிகள் மோதவுள்ளதுடன், அரச திணைக்களங்களுக்கிடை யிலான போட்டியில் யாழ். மாவ ட்ட செயலக அணியை யாழ். சுகாதார திணைக்கள அணி மோதவுள்ளது.

வடமாகாண ரீதியிலான கழ கங்களுக்கிடையிலான போட்டி யில் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகத்தை எதி ர்த்து அளவெட்டி மத்தி விளை யாட்டுக்கழகம், பொற்பதி விளை யாட்டுக்கழகம் ஆகியன மோத வுள்ளன. (க)

## 112 கிலோ கேரள..

ந்த 112 கிலோ கேரள கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மாதகல் பகுதியில் உள்ள கடற்பகுதியில், நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கடற்படையின் புலனாய்வுப் பிரிவும் இளவாலை பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் மூலம் இந்த கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டதாக பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 2 கோடி 24 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் குறித்த கடல் பகுதியில் இருந்து தப்பிச் சென்ற நிலையில், அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## கொழும்பு ரயில்...

வரே உயிரிழந்தார்.

மருதானையிலிருந்து தெற்கு களுத்துறை நோக்கி பயணித்த ரயிலே குறித்த நபர் மீது மோதியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலம், ரயிலின் மூலம் வெள்ளவத்தை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## யாழ்.நாவற்குழி...

ஞர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை சாவகச்சேரி நீதிமன்றம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த விசாரணையின்போது நாவற்குழி இராணுவ அதிகாரி துமிந்த கெப்பிட்டிவலான மற்றும் இராணுவத் தளபதி சார்பாக ஆஜரான பிரதிமன்றாடியார் நாயகம் சேத்திய குணசேகர, இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தின் கவனத்தில் இருப்பதால், இன்று (நேற்று) எடுத்துக்கொள்ளக்கூடாது என வாதம் செய்தார்.

மனுதாரர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி கு.குருபரன், எஸ்.சுபாசினி ஆகியோர், இது தொடர்பாக மனுதாரர்களுக்கு அறிவித்தல் தரப்படவில்லை எனவும், உயர் நீதிமன்றத்தால் எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படக் கூடாதென எந்தவித கட்டளைகளும் ஆக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினர்.

இருதரப்பு வாதங்களையும் செவிமடுத்த சாவகச்சேரி நீதவான் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டவாறு விசாரணையை இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

அதன்போது பிரதிமன்றாடியார், ஒக்ரோபர் மாதத்தில் திகதி கேட்க, நீதவான் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (ம-3)

## கோதுமை மா -...

தார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

காலத்துக்கு காலம் கோதுமை மா மற்றும பால்மா ஆகியவற்றின் விலைகளில் மாறறம் ஏற்படும் நிலை காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியத்தை சந்திக்க வேண்டியுள்ளது.

ஆகையால் கோதுமை மா மற்றும் பாலமா ஆகியவற்றுக்கான விலை சூத்திரங்களை விரைவில் அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## யாழில் 1,253...

பெற்றது.

குறித்த நியமனங்களை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் வழங்கி வைத்தனர். (ம-3)

## அமைச்சர் ரிசாத்...

தில் உண்மை மறைக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவினால், அவர் நிரபராதி என்று பரிந்துரைக்கவும் இல்லை. ஜனாதிபதி அவருக்கு மீண்டும் அமைச்சு பதவியை வழங்கியதை நாங்கள் எதிர்க்கின்றோம். அதேபோல் ரிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாங்கள் மீண்டும் கொண்டு வருவோம்.

பயங்கரமான திருடனுக்கு எதிராக எம்மால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்வோம். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய அழைப்பு விடுக்கப்படவில்லை. எனினும் வேட்பாளரை மனதார வாழ்த்துகிறேன்.

பொதுஜன பெரமுன நிறுத்தும் வேட்பாளர் பொது வேட்பாளராக இருப்பார். அவரது வெற்றிக்காக பாடுபடுவேன். தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் வேட்பாளருக்கு ஆதரவளிக்கப்படும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அமெரிக்க குடியு...

கான ஆவணம் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியலமைப்புக்கு அமைய தேர்தல் ஒன்றில் போட்டியிடும் ஒருவர் வெளிநாட்டு குடியுரிமையை கொண்டிருக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படவுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ களமிறங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்தப் பின்னணியிலேயே கோத்தபாய தனது அமெரிக்க குடியுரிமையை ரத்து செய்ய விண்ணப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தெரிவுக்குழுவில்...

குத் தெரிவித்தார். அதன்பிறகு பூஜித ஜெயசுந்தர என்னை அழைத்து கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டாரா என்று கேட்டார். நான் அதை உறுதிப்படுத்தினேன். ஜனாதிபதி என்னிடம் சொன்னார் என்று தெரிவித்தேன். அதுவரை பூஜித அனைத்து என்.எஸ்.சி கூட்டங்களிலும் தொடர்ந்து கலந்து கொண்டார்." என்று அவர் கூறினார்.

பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்துக்கு வேறு யாரையும் அழைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு தெரிவிக்கவில்லை என்று அவர் கூறினார். எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தில் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டதாகவும், தனக்கு பின்னர் பாதுகாப்பு செயலாளராக இருந்தவரின் காலத்தில் கூட்டங்களில் கலந்து கொண்டதாகவும் அவர் கூறினார்.

ஒக்ரோபர் 2, 2018 க்குப் பின்னர் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சில் கூட்டங்களைப் பற்றி தனக்குத் தெரியாது என்று வைத்தியரத்ன தெரிவித்தார். ஏனெனில் அவர். ஒக்ரோபர் 30, 2018 அன்று, தனது சொந்த விருப்பின் பேரில் ராஜினாமா செய்தார். ஒக்ரோபர் 26, 2018 அன்று நிகழ்ந்த சம்பவத்துக்குப் பின்னர் நாடு அரசியல் ரீதியான நெருக்கடிக்குள்ளாகி வருவதை நான் கண்டேன், என வைத்தியரத்ன தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு யாரை வரவழைக்க வேண்டும் என்று முடிவு செய்பவர் பாதுகாப்பு அமைச்சரே என்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கூறினார்.

தான் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் விடுதலைப்புலிகளை மறுசீரமைப்பது குறித்து பாதுகாப்பு கவுன்சிலுக்கு தகவல் கிடைத்ததாக வைத்தியரத்ன தெரிவித்தார். அதே நேரத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் குறித்தும், "ரில்வான்" என்றவர் தீவிரவாதத்துடன் தொடர்புபட்டமை குறித்து பேசப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## பொறுப்புக்களை...

பிரேமதாஸ நேற்று அம்பாந்தோட்டையில் தெரிவித்தார்.

இந்நாட்டிலுள்ள அனைத்து குடும்பங்களினதும் எதிர்கால பொறுப்பு, தற்போதைய பொறுப்பு மற்றும் பிறக்கவுள்ள குழந்தைகளின் பொறுப்பைக்கூட தாம் ஏற்றுக்கொள்வதாக சஜித் பிரேமதாஸ கூறினார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெல்லகஸ்வெவ பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நந்திமித்ர கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வின்போதே அமைச்சர் இவ்விடயங்களைக் குறிப்பிட்டார். (ம-3)

## பொன்சேகாவை...

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தெரிவுக்குழுவின் அமர்வின்போது இருவருக்கும் இடையில் பரஸ்பர வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது சுமந்திரன் கடும் தொனியில் பொன்சேகாவை எச்சரித்ததாக குறிப்பிடப்படுகிறது.

தெரிவுக்குழு கூட்டத்தில் இராணுவ தளபதி மஹேஷ் சேனாநாயக்க மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்னவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது சரத் பொன்சேகாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இராணுவ தளபதியிடம் கேள்வி எழுப்பும் போது சுமந்திரன் அங்கு தலையிட்டுள்ளார். இதன்போது சுமந்திரனிடம், பொன்சேகா கேள்வி ஒன்று வினவியுள்ளார்.

அதற்கு கடுமையான பதில் ஒன்றை வழங்கிய சுமந்திரன், பீல்ட் மார்ஷல் என்னிடம் கேள்வி கேட்க முடியாது என தெரிவித்ததாக குறித்த ஊடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-3)

## சட்டமா அதிபர்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் அந்த திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொண்ட தலையீடு தொடர்பில் பிரதி மன்றாடியார் நாயகம் திலிப் பீரிஸ் விளக்கமளித்தபோதே இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கிடைத்த முறைப்பாடு குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை தொடர்பிலும் அவர் குற்றம் சாட்டினார். (ம-3)

## மரண தண்டனை...

தெரிவித்துள்ளார்.

கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பாரிய குற்றச் செயல்களின் பின்னால் போதைப்பொருளே இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறந்ததொரு நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே, இந்த போதை வர்த்தகர்களுக்கு மரண தண்டனையை பெற்றுக்கொடுக்க வேண்டுமென தான் தீர்மானித்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-3)

## மகிந்தவால் தீர்வு..

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து கடந்த காலத்தில் கூட்டமைப்புடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இருந்து மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் விலகியது என்றும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 2015 இல் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்வுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு புதிய அரசியலமைப்பு தீர்மானம் பாராளுமன்றில் கொண்டு வரப்பட்டது.

இதன் பின்னர் இடைக்கால அறிக்கை வந்தபோது, குறித்த அறிக்கை நாட்டை பிளவுபடுத்தும் என கூறி பாராளுமன்றத்தை கலைத்ததாக மகிந்த அரசாங்கம் கூறியது.

இவ்வாறு இருக்கையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு நாமல் ராஜபக்ஷ குறுகிய நோக்கத்தோடு, உண்மைகளுக்கு மாறாக கருத்துக்களை தெரிவிப்பதை கண்டிக்கின்றோம்.

யுத்தத்தின்போது யார் போர் குற்றம் இழைத்தார்கள் என்பது மக்களுக்கு தெரியும். இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறாமல், வடக்கு கிழக்கு மக்களுக்கான தீர்வு திட்டத்தை முன்வைக்காமல் இவ்வாறு கூறுவதையிட்டு வேதனையடைகின்றோம்" எனக் கூறினார். (ம-3)

### நீரோகா லக்ன ஜய

திகதி 2019/08/01
சீட்டிழுப்பு இலக்கம் 0579
லக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 04 30 36 47
தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1554 திகதி 2019/08/01
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 22 26 51 53
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2019/08/01
சீட்டிழுப்பு இலக்கம் 3972
ஆங்கில எழுத்து: A
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 7 4 1 4 6
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 2196
ஆங்கில எழுத்து: O
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 07 38 57
தேசிய லொத்தர் சபை

### ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1591
சீட்டிழுப்பு திகதி 01-08-2019
வெற்றி இலக்கங்கள்: 12 39 51 56
ஆங்கில எழுத்து: Q
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1015
சீட்டிழுப்பு திகதி 01/08/2019 வியாழக்கிழமை
Y 16 34 53 71
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 01.08.2019 வெற்றி வாரம் 2573 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 26 34 39 47 கன்னி
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 4882
ரூ.100 பரிசுக்காக 529
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

A/L 2020&A/L 2021
கணக்கீடு:- MR.BALAKAJEN
(Tutorial Staff) (9078)
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
ஆரம்ப தேர்ச்சியில் இருந்து கற்பிக்கப்படும்
தொடர்பு:- 076 565 5956
கந்தர்மடம் (Tue & fri 5-7 pm
கொழும்புத்துறை (Sat & Sun 2-6 pm

வீடு வாடகைக்கு
44/14 சங்கிலியன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. AC, CCTV, சகல தளபாடங்களுடன் கூடிய வசதிகள் உண்டு. நிகழ்வுகள் நடத்தவோ, நிறுவனங்களின் ·பாவனைக்கோ மிகவும் உகந்தது. நாள் வாடகைக்கும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0774971432 (9772)

PHYSICS
for you
A/L 2020 - Fields, A/L 2021 - Mechanics
English Medium
&
Tamil Medium
Group &
Personal
Classes
BY : M.JEYA
(B.Sc, PGED)
076 294 3565
No.209, Palay Road, Kondavil East, Kondavil. (9764)

# நம்பிக்கையில்லா பிரேரணையை எந்தநேரத்திலும் எதிர்கொள்ளத்தயார்

## ரிஷாத் பதியுதீன் சவால்

(வவுனியா)

நான் குற்றமற்றவர் என அறிவிக்கப்பட்ட பின்னரும் எதிர்கால அரசியலுக்காக சிலர் என் மீது பழி சுமத்தி பேசுகிறார்கள். ஆனால் எத்தகைய சவால்களையும் நான் எதிர்கொள்ளத் தயார் என வர்த்தக, கைத்தொழில், நீண்டகால அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி அதில் குளிர்காய்கின்ற ஒரு சில அரசியல்வாதிகள், அதில் ஒரு சில மதகுருமாரும் சேர்ந்து என்மீது குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து முன்வைத்து வந்தார்கள். என்மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் தம்மிடம் வந்து முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் பகிரங்கமாக அறிவித்தார்கள். அதற்கு காலக்கெடுவும் கொடுத்தார்கள். பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எல்லா ஊடகங்களுக்கும் அதைச் சொன்னார். அப்படி இருந்தும் 30 இற்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்களை என்மீது சுமத்தினார்கள்.

சுமத்தப்பட்ட அத்தனை குற்றச்சாட்டுக்களும் விசாரணை செய்யப்பட்டு சபாநாயகருக்கு பொலிஸ் மா அதிபர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். அதில் எந்தவித பயங்கரவாத குற்றசாட்டும் எனக்கு கிடையாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பயங்கரவாத தாக்குதலுடன் எந்த சம்பந்தமும் இல்லை என தெளிவாக தெரியப்படுத்திய பின்னரும், இன்னும் கூக்குரல் இடுகின்றார்கள் என்றால் அது அரசியல் வங்குரோத்து நிலை. அவர்களுடைய எதிர்கால அரசியல் நலனுக்காக இவ்வாறு செய்கிறார்கள். அதனால் அவர்கள் இவ்வாறு பேசுகிறார்கள். அவர்களால் கொண்டு வரப்படுகின்ற எந்தவொரு பிரச்சினையையும், நம்பிக்கையில்லா பிரேரணையாக இருந்தால் அதை கூட எதிர்கொள்ளத் தயார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் தங்களுடைய வேட்பாளர் யார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்க வேண்டும். அதன்பின்னர் எங்களுடைய கட்சி அந்த வேட்பாளருக்கு ஆதரவு கொடுப்பதா, இல்லையா என்பதை கூடி ஆராய்ந்து முடிவெடுக்கும். நாங்கள் யாருக்கும் கடன்பட்டவர்கள் அல்ல. எதிர்வரும் 3 ஆம் திகதி எங்களுடைய கட்சியின் உயர் பீடம் கூட இருக்கிறது. இதன் போது எதிர்கால ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவோம் எனத் தெரிவித்தார்.

(ம-3,250,299)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
(C-7054)

ரெஸ்ரூரண்ட் / ஹோட்டல் வாடகைக்கு விடப்படும்
கிளி. நகரில் அமைதியான சூழலில் சகல வசதிகளுடனும் வாகனத் தரிப்பிட வசதியுடன் விசாலமான நிலப்பரப்புடன் பொழுது போக்கு வசதிகளுடன் அமைந்த ஹோட்டல் வாடகைக்கு விடப்படும். (C-7168)
தொடர்புகளுக்கு : 0775456420

வேலைவாய்ப்பு
Full Time / Part Time
(1) Room Boy / waiter
விபரம்
SUBBAS HOTEL
No: 49, Victoria Road, Jaffna.
021 222 4923 077 727 8630
இத்துறையில் முன் அனுபவம் அவசியம் (9752)

MATHS GROUP CLASSES (TAMIL & ENGLISH MEDIUM)
Grade 6 - 11
076 286 5520 (9775)

துரித தபால்கள் பொதிகள் சேவை
DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள்
3 வேலை நாட்களில்
ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-7191)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9776)

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னலட்சுமி தட்சணாமூர்த்தி

தும்பளை நெல்லண்டையை பிறப்பிடமாகக்கொண்ட திருமதி அன்னலட்சுமி தட்சணாமூர்த்தி அவர்கள் 01.08.2019 அன்று காலமானார்.

அன்னார் அமரர் இராஜரட்ணம் செல்லாச்சி அவர்களின் ஏக புதல்வியும், திரு.திருமதி கந்தவனத்தின் மருமகளும், அமரர் மு.க.தட்சணாமூர்த்தி (உரிமையாளர் - செல்வம் ஸ்ரோர்ஸ் கண்டி) அவர்களின் பாசமிகு மனைவியும், திரு.இராஜ் சுப்பிரமணியம் (முன்னாள் கணக்காளர் கல்வி அமைச்சு), திரு.இ.சிவபுண்ணியம் (முன்னாள் பிரதேச செயலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் ம.கணபதிப்பிள்ளை (முன்னாள் அதிபர் - யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி), க.சிவனேசன், புவனஜோதி ஆகியோரின் மாமியாரும், தனலட்சுமி (ஓய்வு ஆசிரியை), ஜெயலட்சுமி (ஆசிரியர் - யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை), கந்தவேள் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உருத்திரேஸ்வரி, பரமேஸ்வரி, அமரர்கள் சுப்பிரமணியம், சந்திரசேகரம், சதாசிவம், நாகரத்தினம், இராசரத்தினம், இராசமணி ஆகியோரின் மைத்துனியும், மதிவதனி (ஆசிரியர் - யா/தும்பளை சிவ.ம.வி), மதிவாணன், செல்வக்குமார் (ஆசிரியர் - யா/நெல்லியடி மத்திய கல்லூரி), கிருஜாந்தி, சிவதர்ஷா, (ஆசிரியர் - கிளி/சென்திரேசா.வி), பிரணவன், அபர்ணா, தயான், சஜீவ் (கமநல அபிவிருத்தி திணைக்களம்) ஆகியோரின் பேர்த்தியும், விகாஷன், விதுஷா, காவியா, கபிஷன், அர்ச்சிகா ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2019) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தும்பளை கோரியடி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-7169)

T.P : 021 226 4207, 077 087 3349 தகவல் : குடும்பத்தினர் (சாந்தி - நெல்லண்டை)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.